No. M. 2210. வருஷ சந்தா ரூ. 1-8-0.

AUTHOR & PROPRIETOR } வை. மு. கோதைநாயகி அம்மாள்.
(MRS. V. M. PARTHASARATHY IYENGAR.)

JAGANMOHINI

மலர் VI.] [இதழ் 2.

OFFICE OF THE REGISTRAR OF BOOKS 28 NOV 1929 MADRAS

3C
n211, N22 Jm
N29.6.2
182853

தனிப்பிரதி அணா 3.

...ன் மோகினி" ஆபீஸ்.
...தெருடித் தெரு, :: திருவல்லிக்கேணி, மதராஸ்.

குறிப்பு—ஒவ்வொரு மாதமும் கடைசித் தேதிக்குள் பத்திரிகை வெளியாகும்

ஜகன்மோகினி.

இதன் 6-வது ஆண்டு 1928-ஹு டிசம்பர்மீ முதல் ஆரம்பம். இதில் ஸ்ரீமதி வை. மு. கோதைநாயகி அம்மாளால் இயற்றப்பட்ட, ''நவநீத கிருஷ்ணன்'' என்னும் அற்புதமான துப்பறியும் நாவலும் ஹாஸ்ய விநோதங்களும், அனுபவ நீதிகளும், காவியங்களும், இன்னும் மற்ற ருசிகரமான விஷயங்களும் வெளிவருகின்றன. இதன் வருடச் சந்தா உள்நாடு, வெளி நாடு இரண்டிற்கும் தபாற்கூலியுள்பட ரூ. 1—8—0.

சந்தா விவரம்.

(1) சந்தாத் தொகையை நமக்கு நேரில் முன்பணமாக அனுப்பியாவது, வி. பியில் பணம் கட்டியாவது அல்லது நமது கௌரவப் பிரதிநிதிகளிடத்திலும், ஏஜண்டுகளிடத்திலும் கொடுத்தாவது பத்திரிகையைப்பெற்றுக்கொள்ளலாம் பத்திரிகையை வி. பியில் அனுப்புவதால் சந்தாநேயர்களுக்கு மூன்றணு அதிக செலவுண்டாகுமாதலால் முன்பணம் அனுப்புவதே நலம்.

(2) இவ்வாண்டில் நாம் எல்லா சந்தா நேயர்களுக்கும் புதிய நம்பரைக் கொடுப்பதால் இனிமேல் அவர்கள் எழுதும் கடிதங்களில் புதிய நம்பரை [illegible]காமல் குறிப்பிடவேண்டும்.

(3) பிரதி ஆங்கில மாதமும் கடைசித் தேதியில் நமது பத்திரிகையை நாம் எல்லா சந்தா நேயர்களுக்கும் அனுப்புகிறோம். ஒரு மாதத்து சஞ்சிகை அடுத்த மாதம் 15 தேதிக்குள் கிடைக்காவிட்டால் அது தபாலில் தவறிவிட்டதென்று தெரிந்து உடனே நமக்கு தெரிவித்தால் வேறு சஞ்சிகையை அனுப்புவோம். அப்படிச் செய்யாதவர்களுக்கு மூன்றணு ஸ்டாம்பு அனுப்பினால்தான் வேறு சஞ்சிகை அனுப்பப்படும்.

(4) இடம் மாறும் சந்தா நேயர்கள் தமது புது விலாசத்தை உடனே நமக்குத் தெரிவிப்பதுடன் தங்களுடைய புது விலாசத்திற்கு சஞ்சிகை சேரும் வண்ணம் தபாலாபீஸோடு ஏற்பாடு செய்துக்கொள்ளவேண்டும். அப்படிச் செய்யாது சஞ்சிகை தவறிவிடின் அதற்கு நாம் ஜவாப்தாரியல்ல.

ஸ்ரீமான்-வடுவூர் கே. துரைசாமி ஐயங்கார் எழுதிய நாவல்கள்.

	ரூ.	அ.		ரூ.	அ.		ரூ.	அ.
பூர்ணசந்திரோதயம் 1,2,3,4	7	8	கும்பகோணம் வக்கீல் 1,2	3	0	வஸந்த மல்லிகா	1	8
மாயாவிநோதப் பரதேசி 1,2	5	0	மேனகா 1,2	3	0	வித்யாஸாகரம்	1	4
மதனகல்யாணி 1,2,3	4	8	பாலாமணி	2	8	திவான் லொடபட சிங் பகதூர்	0	12
			சௌந்தரகோகிலம் 1,2,3	6	0	மாணிக்கவாசகர்	0	8

வத்ஸா கம்பெனி,
திருவல்லிக்கேணி.

OFFICE OF THE REGISTRAR ... 2 NOV 19.. MA...

எமது நன்றியறிதல்

அன்பார்ந்த சந்தா நேயர்களுக்கு!

சென்ற வாண்டுகளைப் போல இவ்வாண்டிலும் நமது சகோதர சகோதரிகள் மோகினியை ஆதரிக்க முன் வந்துள்ளதற்கும் புதிதாகச் சேர்ந்துள்ள நேயர்களுக்கும் எமது மனப்பூர்வமான நன்றியறிதலைத் தெரிவித்துக் கொள்கிறோம். நாம் முன்னர் தெரிவித்தது போல நமது மோகினியின் பக்கங்களை அதிகப் படுத்தியுள்ளோம். அதாவது வழக்கமாக ஐந்து பாரங்களில் வெளிவந்த நம் மோகினி இவ்வருடம் முதல் இதழ் முதற் கொண்டு ஆறு பாரங்களுடன் வெளி வருவது நேயர்கள் அறிந்த விஷயம். இன்னமும் ஒன்றிரண்டு பாரங்களை அதிகமாக்குவதற்குப் போதிய ஆதரவை நமது நேயர்கள் அளித்து சந்தாநேயர்கள் பெருகும் பக்ஷத்தில் இதே சந்தாவில் இன்னும் பக்கங்களை அதிகப்படுத்துவதில் ஆக்ஷேபணையில்லை. 48 பக்கங்களுடன் இப்போது வெளியிடும் சஞ்சிகையை 56 பக்கங்களாக்கவேண்டுமென்பதே எமது நோக்கம். நமது நேயர்கள் ஒவ்வொருவரும் குறைந்தது இரண்டு சந்தாதார்களைச் சேர்த்துக் கொடுத்து உதவினல் கூடிய சீக்கிரத்திலேயே 56 பக்கங்களுடன் வெளியிடத்தயாராக விருக்கிறோம். மேற் குறித்த உதவியை எல்லோரும் செய்வார்களென்பதை நம்பி எதிர் பார்க்கிறோம்.

பரிசுகளின் விவரம்.

முதல் சஞ்சிகைக்குப் பிறகு பணம் அனுப்பியவர்களில் கீழ்க் கண்டவர்களுக்கு பரிசுகள் விழுந்திருக்கின்றன.

பரிசு	ரூ.	சந்தா. ந.	
1-வது	15	3020	Mr. S. Thiagarajan, Durban.
2-வது	10	3680	Mr. C. Srinivasan, Rangoon.
3-வது	5	3254	ஸ்ரீமதி காமாக்ஷியம்மாள் Kumbakonam.
4-வது	5	3461	Mr. M. V. Sundararajan, Matunga.

மேற்கூறியவர்கள் தமக்கு வேண்டிய புத்தகங்களைத் தெரிவித்தால் அனுப்புகிறோம்.

அடுத்த சஞ்சிகை வெளியாவதற்குள் சேரும் சந்தாதாரர்களுக்கு 5-ரூபாயில் இரண்டு பரிசுகள் கொடுக்கப்படுக் கண்டு

ஜகன்மோகினி.

இதன் 6-வது ஆண்டு 1928-வரு டிசம்பர்மீ முதல் ஆரம்பம். இதில் ஸ்ரீமதி வை. மு. கோதைநாயகி அம்மாளால் இயற்றப்பட்ட, "நவநீத கிருஷ்ணன்" என்னும் அற்புதமான துப்பறியும் நாவலும் ஹாஸ்ய விநோதங்களும், அனுபவ நீதிகளும், காவியங்களும், இன்னும் மற்ற ருசிகரமான விஷயங்களும் வெளிவருகின்றன. இதன் வருடச் சந்தா உள்நாடு, வெளி நாடு இரண்டிற்கும் தபாற்கூலியுள்பட ரூ. 1—8—0.

சந்தா விவரம்.

(1) சந்தாத் தொகையை நமக்கு நேரில் முன்பணமாக அனுப்பியாவது, வி. பியில் பணம் கட்டியாவது அல்லது நமது கௌரவப் பிரதிநிதிகளிடத்திலும், ஏஜண்டுகளிடத்திலும் கொடுத்தாவது பத்திரிகையைப்பெற்றுக்கொள்ளலாம் பத்திரிகையை வி. பியில் அனுப்புவதால் சந்தாநேயர்களுக்கு மூன்றணு அதிக செலவுண்டாகுமாதலால் முன்பணம் அனுப்புவதே நலம்.

(2) இவ்வாண்டில் நாம் எல்லா சந்தா நேயர்களுச்கும் புதிய நம்பரைக் கொடுப்பதால் இனிமேல் அவர்கள் எழுதும் கடிதங்களில் புதிய நம்பரை மறக்காமல் குறிப்பிடவேண்டும்.

(3) பிரதி ஆங்கில மாதமும் கடைசித்தேதியில் நமது பத்திரிகையை நாம் எல்லா சந்தா நேயர்களுக்கும் அனுப்புகிறோம். ஒரு மாதத்து சஞ்சிகை அடுத்த மாதம் 15 தேதிக்குள் கிடைக்காவிட்டால் அது தபாலில் தவறிவிட்டதென்று தெரிந்து உடனே நமக்கு தெரிவித்தால் வேறு சஞ்சிகையை அனுப்புவோம். அப்படிச் செய்யாதவர்களுக்கு மூன்றணு ஸ்டாம்பு அனுப்பினால்தான் வேறு சஞ்சிகை அனுப்பப்படும்.

(4) இடம் மாறும் சந்தா நேயர்கள் தமது புது விலாசத்தை உடனே நமக்குத் தெரிவிப்பதுடன் தங்களுடைய புது விலாசத்திற்கு சஞ்சிகை சேரும் வண்ணம் தபாலாபீஸோடு ஏற்பாடு செய்துக்கொள்ளவேண்டும். அப்படிச் செய்யாது சஞ்சிகை தவறிவிடின் அதற்கு நாம் ஜவாப்தாரியல்ல.

ஸ்ரீமான்-வடுவூர் கே. துரைசாமி ஐயங்கார் எழுதிய நாவல்கள்.

பூர்ண சந்திரோ	ரூ	அ.	கும்பகோணம் வக்	ரூ.	அ.		ரூ.	அ.
தயம் 1,2,3,4	7	8	கீல் 1,2	3	0	வஸந்த மல்லிகா	1	8
மாயாவிநோதப் பர			மேனகா 1,2	3	0	வித்யாஸாகரம்	1	4
தேசி 1,2	5	0	பாலாமணி	2	8	திவான் லொடபட		
மதனகல்யாணி			சௌந்தரகோகி			சிங் பகதூர்	0	12
1,2,3	4	8	லம் 1,2,3	6	0	மாணிக்கவாசகர்	0	8

வத்ஸா கம்பெனி,
திருவல்லிக்கேணி.

எமது நன்றியறிதல்

OFFICE OF THE REGISTRAR ... 2 NOV 19.. MAD...

அன்பார்ந்த சந்தா நேயர்களுக்கு!

சென்ற வாண்டுகளைப் போல இவ்வாண்டிலும் நமது சகோதர சகோதரிகள் மோகினியை ஆதரிக்க முன் வந்துள்ளதற்கும் புதிதாகச் சேர்ந்துள்ள நேயர்களுக்கும் எமது மனப்பூர்வமான நன்றியறிதலைத் தெரிவித்துக் கொள்கிறோம். நாம் முன்னர் தெரிவித்தது போல நமது மோகினியின் பக்கங்களை அதிகப் படுத்தியுள்ளோம். அதாவது வழக்கமாக ஐந்து பாரங்களில் வெளிவந்த நம் மோகினி இவ்வருடம் முதல் இதழ் முதற் கொண்டு ஆறு பாரங்களுடன் வெளி வருவது நேயர்கள் அறிந்த விஷயம். இன்னமும் ஒன்றிரண்டு பாரங்களை அதிகமாக்குவதற்குப் போதிய ஆதரவை நமது நேயர்கள் அளித்து சந்தாநேயர்கள் பெருகும் பக்ஷத்தில் இதே சந்தாவில் இன்னும் பக்கங்களை அதிகப்படுத்துவதில் ஆக்ஷேபணையில்லை. 48 பக்கங்களுடன் இப்போது வெளியிடும் சஞ்சிகையை 56 பக்கங்களாக்கவேண்டுமென்பதே எமது நோக்கம். நமது நேயர்கள் ஒவ்வொருவரும் குறைந்தது இரண்டு சந்தாதார்களைச் சேர்த்துக் கொடுத்து உதவினால் கூடிய சீக்கிரத்திலேயே 56 பக்கங்களுடன் வெளியிடத்தயாராக விருக்கிறோம். மேற் குறித்த உதவியை எல்லோரும் செய்வார்களென்பதை நம்பி எதிர் பார்க்கிறோம்.

பரிசுகளின் விவரம்.

முதல் சஞ்சிகைக்குப் பிறகு பணம் அனுப்பியவர்களில் கீழ்க் கண்டவர்களுக்கு பரிசுகள் விழுந்திருக்கின்றன.

பரிசு	ரூ.	சந்தா. ந.	
1-வது	15	3020	Mr. S. Thiagarajan, Durban.
2-வது	10	3680	Mr. C. Srinivasan, Rangoon.
3-வது	5	3254	ஸ்ரீமதி காமாக்ஷியம்மாள் Kumbakonam.
4-வது	5	3461	Mr. M. V. Sundararajan, Matunga.

மேற்கூறியவர்கள் தமக்கு வேண்டிய புத்தகங்களைத் தெரிவித்தால் அனுப்புகிறோம்.

அடுத்த சஞ்சிகை வெளியாவதற்குள் சேரும் சந்... களுக்கு 5-ரூபாயில் இரண்டு பரிசுகள் கொடுக்கப்படு...

பதினெட்டாம் பாஷை

இந்த நூதன பாஷையை 15 நிமிஷங்களில் கற்றுக்கொண்டு பேசவும், எழுதவும் ஆரம்பித்து விடலாம். இந்த பாஷையில் வியாபார ரகசியங்களைக் குறித்துக்கொண்டால் இப்பாஷை தெரிந்தவர்கள் தவிற வேறு எவரும் கண்டு கொள்ள முடியாது. ஸ்திரீகள் தங்கள் கணவர்களுடன் குடும்ப ரகசியத்தைப் பேசினால் பக்கத்திலுள்ளவர்கள் ஒற்றுக்கேட்டு பிறரிடம் சொல்லி கோள் மூட்ட முடியாது. இது ஓர் அபூர்வதமிழ் பரிபாஷை. சொற்ப காபிகளே கையிருப்பிலிருக்கின்றன. முந்துங்கள்.

விலை அணு 8.

அமிர்த குணபோதினி ஆபீஸ்,
302, தங்கசாலை வீதி, மதராஸ்,

“ கிருஷிகன் ”

ஓர் மாதாந்த விவசாயப் பத்திரிகை.

பத்திரிகாசிரியர்கள்:....

(1) ராவ்பஹதூர் ஜெ. செல்வரங்க ராஜு
பென்ஷண்ட் விவசாய டேப்டி டைரேக்டர்

(2) J. R. ரங்கராஜு

வருஷ சந்தா தபால் கூலி உள்பட ரூபாய் ஒன்றுதான்.

எல்லோரும் சுலபமாய் அறிந்து கொள்ளக்கூடிய எளிய நடையில் கிருஷிகருக்கு அனுகூலமுண்டாகக் கூடிய வழிகளை எடுத்துக் காட்டுவதிலும், கிருஷிகருக்கு ஏற்படும் சந்தேகங்களை நிவர்த்திப்பதிலும் “ கிருஷிகனு ”க்குச் சமான மான பத்திரிகை கிடையவே கிடையாதென்பது நிச்சயம்.

“ கிருஷிகன் ” பத்திரிகையானது சுயநலத்தைக் கருதாது விவசாய அபிவிருத்தியையும், அதன் மூலமாய் தேசக்ஷேமத்தையும் கருதி வெளிப்படுவதால் வருஷ சந்தா தபால் கூலி உள்பட ரூ. ஒன்று வைக்கப்பட்டிருக்கிறது.

வி. பி. மூலமாய் அனுப்பினால் ரிஜிஸ்ட்ரேஷன் கூலி சேர்த்து ரூ 1-4-0 ஆகும். ஆகையால் உடனே ரூ. ஒன்று மணியார்டர் செய்து தங்கள் பேர்களைப் பதிவு செய்து பத்திரிகை பெற்றுக் கொள்ளுங்கள்.

மானேஜர் “ கிருஷிகன் ” ஆபீஸ்,
“ ஜகந்நாதபாக் ” சைதாப்பேட்டை, சென்னை.

வியாஸங்கள்.

வியாஸங்கள் ! வியாஸங்கள் !!

வியாஸங்களை மிக எளிதில் அறிந்து அதன்படி நடந்து நன்மை யடையக் கூடிய விதமாக எழுதப்பட்டுள்ளன

கீழ்கண்ட வியாஸங்கள் ஒவ்வொரு தமிழரும் வாங்கி வாசித்துப் பயனடையக் கூடியனவாகும்.

நமது முன்னோர்களுடைய உபதேசங்கள் பலவற்றை நம்மில் பலர் அறியாமலிருக்கிறார்கள். காரணம், அவை யாவும் செய்யுளாக இருப்பதினால்தான். இந்த வியாஸங்கள் அச்செய்யுட்களையே பெரும்பாலும் தழுவி வசனமாக எழுதப்பட்டிருக்கின்றன.

	ரூ.	அ.		ரூ.	அ.
அன்பு	0	1	போதுமதம்	0	2
பலவகை மனிதர்	0	1	ஆருதாரம்	0	2
தவம்	0	1	சந்தேகம்	0	2
பொறுமை	0	1	கற்பு	0	3
இருவினை	0	2	அஸ்தபூஷணம்	0	4
இல்லறம்	0	2	பதினறுபேறு	0	4
ஆலயவழிபாடு	0	2	என் தந்தையார்	0	6

மேல்கண்ட பதினன்கு புத்தகங்களையும் ஒரே தடவையில் வாங்குபவர்களுக்கு ரூபாய் இரண்டேக்கு கொடுக்கப்படும்

தபால் சார்ஜ் இனும். இன்றே எழுதுங்கள்!

நவீனகதா புத்தகசாலை,

122. மங்கமாரி வீதி, இரங்கூன்,

"அறிவு விளக்கம்."

இது அரியதோர் மாதாந்தப் பத்திரிகை. நீதி விஷயங்கள் நிரம்பப்பெற்றது. அறிவைப் பரவச் செய்யும் அருநிதியெனப் புகழ்மலிந்திலங்குவது. வருட சந்தா 6 அணு

அ. கிருஷ்ணசாமிபிள்ளை, ஆசிரியர் 'அறிவு விளக்கம்' ...

பேட்டை.

ஆனந்த விகடன்

64 பக்கங் கொண்ட மாதப்பத்திரிகை.

சிறந்த எழுத்தாளரிடமிருந்து கட்டுரைகள் அதிகமாக வெளியிடப்படுகின்றன. தினமும் நூற்றுக்கணக்கானவர் சந்தாதாரராகச் சேருகின்றனர். மாதப் பத்திரிகைகள் எல்லாவற்றிலும் "ஆநந்தவிகடன்" சிறந்ததென்ற அபிப்பிராயம் ஜனங்கள் மனதில் நன்கு பதிந்திருக்கிறது. "ஆனந்த விகட"னிலுள்ள ஒரு பக்கத்திற்கு ஒரு ரூபாய் கொடுக்கலாமென்று ஒரு சந்தா நேயர் நமக்கு எழுதியுள்ளார். நீங்கள் ஒரு வருஷத்திற்கு ஒரு ரூபாய் கொடுக்கக் கூடாதா?

வருட சந்தா:—இந்தியா, பர்மா, ஸிலோனுக்கு
தபால் கூலியுள்பட ரூ 1....0....0
வெளி நாடுகளுக்கு முன் பணம் ரூ 1....4....0
மாதிரி காபி இனும்

ஆனந்த விகடன் ஆபீஸ்,
244, தங்கசாலை வீதி. மதராஸ்.

தந்தி விலாசம்:—"விகடன்" டெலிபோன் நே. 3311.

வெளிவந்துவிட்டது! 10-ம் பதிப்பு வெளிவந்துவிட்டது!!

ஆங்கில ஆசான்

(எமது லேடி டி ரேட்மார்க்கைப் பார்த்து வாங்குங்கள்.
போலி புத்தகங்களால் ஏமாறவேண்டாம்.)

60-நாளையில் இங்கிலீஷ் கற்றுக்கொள்ளக்கூடியவிதமாய் அப்பியாச பாடங்களாக வகுத்து முன்பதிப்புகளை விட அதிக பக்கங்கள் சேர்த்துப் பெரிய எழுத்துக்களில் அச்சிட்டிருக்கிறது. இதுவரையில் 53100 புத்தகங்கள் செலவாயிருப்பதாலேயே இதன் மேன்மை விளங்கும். இப்பத்தாம் பதிப்பு ஆங்கில ஆசான் புத்தகங்களை விட வேறு எந்த புத்தகங்களிலிருந்தும் அவ்வளவு சீக்கிரத்தில் இங்கிலீஷ் கற்றுக்கொள்ள முடியாதென்பது பலரும் அறிந்த விஷயம். நமது முன் பதிப்பு புத்தகங்களை வைத்திருப்பவர்கள் கூட 10-ம் பதிப்பைப் பார்த்தால் இதிலும் ஒன்று கட்டாயம் வாங்க வேண்டுமென்று எண்ணுவார்கள். இதில் 1-அணு முதல் ...00-ரூபா வரையில் சம்பளம் வாடகை கணக்கும் அச்சிட்...து. 800-பக்கங்களுக்கு மேல்கொண்ட அழகிய ...கா பைண்டு செய்தது. விலை, ரூ. 2.

...கோபால் முதலியார், 302, தங்கசாலை வீதி மதராஸ்.

4-ம் பதிப்பு

இல்வாழ்க்கையின் இரகசியங்கள்

முன்னைக் காட்டிலும் அதிகமாக அநேக
ஆப்டோன் படங்கள் சேர்க்கப்பட்டிருக்கின்றன

விலை ரூபா 2 தான்.



இந்த எரோப்ளேன் டிரேட். மார்க் புஸ்தகத்தில்
இருக்கிறதாவென்று பார்த்து வாங்குங்கள். எரோப்ளேன்
ட்ரேட் மார்க் இல்லாத நூலை நீங்கள் வாங்கினால் நிச்சயம்
ஏமாற்றமடைவீர்கள்

இந்நூலில் அடங்கியுள்ள விஷயங்கள்.

(1) இல்வாழ்க்கை என் சிறந்தது? (2) பெண்ணின் பெருமை, பெண் கல்வி (3) நாணம் எப்படி உண்டாயிற்று? (4) உடைக்கும் நாணத்திற்கும் சம்பந்தம். (5) நாணமுள்ள ஸ்திரீயே அதிக இன்பந் தரக் கூடியவள். (6) நிர்வாணமாயிருப்பதின் தத்துவமென்ன? (7) இக்காலத்தில் எங்கெங்கே நிர்வாணமாயிருக்கின்றனர்? (8) காதல் என்றால் என்ன? காதலுக்கும் காமத்திற்குமுள்ள வித்தியாசம். (9) மனைவிகளைக் கணவன்மார் எப்படி வசியப்படுத்துவது? (10) கணவன்மாரை மனைவிகள் எப்படி வசியப்படுத்துவது? (1I) ஸ்திரீகளுக்கு எப்பெப்பொழுது காமம் உண்டாகிறது? (12) அவர்களிடத்தில் அமிர்த நிலை எங்கெங்கே இருக்கிறது? அதை எப்படி நிலை பெயர்க்கிறது? (13) சங்கமம் செய்யவேண்டிய நாளும் நாழிகையும் (14) ருதுவாவதின் மர்மம் அல்லது மாதவிடாய் என்பதன் தத்துவமென்ன? (15) மனம் போல் மக்களைப் பெறும் அரிய உபாயங்கள் (16) கர்ப்பகாலத்தில் ஸ்திரீகள் நடந்துகொள்ள வேண்டிய முறைகள் இவை போன்ற இன்னும் அநேக அரிய விஷயங்களிருக்கின்றன.

இந்நூல் உங்கள் ஊரிலுள்ள புஸ்தகஷாப்பிலிருக்கிறதாவென்று பாருங்கள்; இல்லாவிட்டால் கீழ்கண்ட விலாசத்துக்கு எழுதவும். ஒரே சமயத்தில் இரண்டு காபிகள் வாங்கினால் தபால் செலவு இனாம்.

வாஸன் புத்தகசாலை,
244, தங்கசாலை வீதி, மதராஸ்.

தந்தி விலாசம் "விகடன்" டெலிபோன் 32

கெட்டி சாயம்! உயர்ந்த உடை!! விலை நயம்!!!

உயர்தரமான பம்பாய் கெட்டிச் சாயமுள்ள

கலர் புடவைகள்

இவைகள் தினந்தோறும் தோய்த்து அணியத் தக்கவை. கெம்புரோஸ், ஆரஞ்சு, பச்சை, சாக்லேட் நிறங்களில் கிடைக்கும். பெண்மணிகளைத் திருப்திப்படுத்த பளபளப்பும் வசீகரத்தோற்றமும் கொண்ட இவ்வாடைகளை வாங்குதலே சரி.
அளவு 18 × 2¾ முழங்கள்.

முதல் ரகம் விலை ரூ. 5-8-0 **2-வது ரகம்** ரூ. 4-8-0 பூக்கொடிக்கரை நெய்து முந்தாணியில் பூவேலை செய்திருக்கும் உருப்படி 1-க்கு ரூ. 1-8-0 அதிகம்.

ஜர்மன் சில்க் புடவைகள்

சாதா: மயில் கழுத்து, பொன் வண்டு, மேகவர்ணம், மாந்தளிர், பச்சை, அரக்கு, கருப்பு முதலிய எல்லாக் கலர்களிலும் கிடைக்கும். பெங்களூர் முந்தாணி போட்டது. கலர் கெடாதது. மனோகரமான மழமழப்பு. பளபளப்பு மாறாதது. ரம்மியமான தோற்றமுள்ளது. நேர்த்தியான நெசவு கொண்டது. நீடித்து நிற்பது. உறுதியானது.

18 × 2¾ முழங்கள் விலை ரூ. 11-8-0
ரவிக்கை துண்டு 1-க்கு 0-11-0

கோட்டடி: கரைகளில் பேட்டு வைத்து உடலில் பவழக் கொடி, தங்கிக் கம்பி, டில்லி தர்பார் முதலிய தினுசுகள்

18 × 2¾ விலை ரூ. 12-8-0
ரவிக்கை 1 முழம் 0-12-0

மேற்படி பிளேன், கொட்டடி தினுசுகளில் ருத்திராக்ஷப் பேட்டு வைத்து தலப்பிலும் ஜரிகை (கருக்காதது) வேலை செய்ய உருப்படி 1-க்கு 3-0-0 அதிகம்.

குறிப்பு.—உத்தம உடைகளுக்கு உத்தரவாதம். ஆகவே நல்ல சரக்குகளை இங்கேயே வாங்குங்கள். ஆர்டருடன் கால் பங்கு முன் பணமனுப்புக. தபால் கூலி வேறு.

ஒரே சமயத்தில் 100 ரூபாய் சரக்கு வாங்குபவர்க்கு 1 ரூபாய்க்கு 0-1-6 வீதம் குறைக்கப்படும்.

ஸிட்டி நெசவுச் சாலை,
65, அரமனைக்கார வீதி,
ஜி. டி. சென்னை.

ஏஜண்டுகள் தேவை.

எங்கள் விசேஷ குறைந்தவிலை விற்பனை

22-காரட் ரோல்டு கோல்டு

புது மாடல் கைக் கெடியாரங்கள்



இதிற் கண்டபடி எந்த ஷேப் வேண்டுமானாலும் அனுப்பப்படும். வேலைப்பாடு மிகவும் உறுதி. கையில் கட்டிக் கொண்டால் தங்க ஆபரணம் போல் இருக்கும் ஒவ்வொரு கடியாரத்திற்கும் ரோல்டு கோல்டு அமெரிக்கன் கைச்சங்கிலி இனமாய்ச் சேர்த்து அனுப்பப்படும். 5 வருஷம் உத்தரவாதம் ரூபா 4-15-0 வி. பி. வேறு.

ரோல்டு கோல்டு "கோல்டன்" ஹாரங்கள்

இவைகள் பரிசுத்தமான ரோல்டுகோல்டில் தயாரித்து இடையிடையே இமிடேஷன் வைரங்கள் பொதியப்பெற்றது. இருதயபதக்கத்துடன் கூடியது

விலை ரூ. 2

ரோல்டு கோல்டு "சோல்டன்" மோதிரம்

இமிடேஷன் வைரங்கள் பொதியப் பெற்றது. பார்வைக்கு ரூ 100 மதிப்புடையது. விரல்களுக்கு நல்ல அணிகலம்; ஒரு முறை வாங்கியவர்கள் திரும்பவும் வாங்குகிறார்கள்.

விலை ரூ 1—8—0 உடனே எழுதுங்கள்

ஜினன் வாட்சு கம்பெனி, மிண்டு பில்டிங்ஸ், மதறாஸ்.

சந்திர மேனகா

By

கமலவாஸன்

ஒரு இனிய தமிழ் நாவல். ஒவ்வொரு பக்கத்திலும் ஆச்சரியத்தையும் மயிர்க் கூச்சையும் உண்டாக்கக் கூடியது. படித்துக் கீழே வைக்கும் வரைக்கும் படிப்போர் மனதைக் கவரத்தக்கது. **மதுரவேணி** இறக்கும் தறுவாயில் **தாராவதி** க்குப் போதித்த நற்குணங்களும், **புஷ்பாவதி மேனகாவை** அவளுடைய தம்பியையே மணக்கும்படி செய்த சூழ்ச்சிகளும், **சந்திரன்** மேனகாவை அடைவதற்காகப் பட்ட கஷ்டங்களும், தன்னைக் காட்டிக்கொள்ளாமல் தாராவதி மேனகாவுக்குச் செய்த உதவிகளும் ஒவ்வொரு பக்கத்திலும் ஆச்சரியத்தைக் கொடுக்கக் கூடியவை விலை அணா 8.

விலாஸம்:—எஸ். கே. ஸ்வாமி, 1086 மேலசித்திரை வீதி, ஸ்ரீரங்கம்.

பின் கூறப்படும் இடங்களில் புஸ்தகம் கிடைக்கும்.

1. M. நடன சுந்தரம் Bros, புது மண்டபம், மதுரை.
2. டி. எம். வி. பிள்ளை, தெப்பக்குளம், திருச்சி.
3. ஹனுமான் வர்த்தக சாலை, ராயப்பேட்டை, ஹைரோட், மைலாப்பூர் சென்னை
4. எ. வீ. ஸ்ரீனிவாஸ அய்யர், 30 முதல் தெரு, மன்னார்கும
5. N. இராமபத்திர அய்யங்கார், மேல மேட்டுத்தெரு

பிரபல ஜோதிஷர்

பண்டிட் காழியூர் ம. ஸ்ரீனிவாஸாச்சாரியார்

மஹாராஜாக்களாலும், புகழ்பெற்ற பல பெரியோர்களாலும் அனேக தங்கமெடல்களும் நற்சாட்சிப் பத்திரங்களும் பரிசு பெற்றவர். ஜாதகம் அல்லது பிறந்த வருஷம் மீ தேதி டயம் முதலியவற்றை தெரிவித்தால் திரிகால பலன்களையும் மிகத்தெளிவாக அறிவிப்பார். ஒரு ஜாதகம் குறிக்க ரூ. 2. ஜாதகத்தின் திரிகால பலன்களையும் தெசபுக்தியுள்பட நேரில் சொல்வதற்கு ரூ. 5. மேற்படி பலன்களை ஆயுள்வரையில் எழுதுவதற்கு ரூ. 20. ஆரூடம் எதிர் காலத்தைப் பற்றிய கேள்வை 3-க்கு ரூ. 1. மேல் கேள்வை ஒவ்வொன்றிற்கு அணா 8. ஆரூடத்திற்கு லெடர் யெழுதும் டயம் தேவை. ஜாதகத்திர்க்கு பிறந்த டயம் தேவை. மற்ற விவரங்களுக்கு தற்கால விலாசத்திற்கு நேரிலாவது எழுதியாவது தெரிந்துகொள்ளலாம்.

218 "ஸ்ரீநிவாஸ்" தங்கசாலை வீதி, மதருஸ்.

அமிர்த குணபோதினி

இது போன்ற நவீன மாதாந்த ஸஞ்சிகை இது வரை தமிழில் வெளி வந்ததில்லை. இதிலுள்ள விஷயங்கள் யாவும் வாசிப்பவர்கள் மனதிற்குப் புதியதாகவும், அற்புதமாகவும் புலப்படும். இப்பத்திரிகையில் ஜாதி, மத வித்தியாசமின்றி சகல மதஸ்தர்களையும் களிக்கச்செய்யும் வியாஸங்களையும் யாவரும் முன்னேற்ற மடையக் கூடிய வழியையும் போதிப்பதை பிரதிமாத சஞ்சிகையிலும் காணலாம். இதில் மாதிரி காப்பி ஒன்று வாங்கி வாசித்துப் பார்த்தால் பிறர் சிபார்சு இல்லாமல் தாங்களே சந்தாவில் சேர்வீர்களென்பது நிச்சயம். பிரதிமாதம் 56 பக்கங்களுடன் வெளிவரும். வருஷ சந்தா ரூ 1. வெளிநாடு ரூ 1—4—0 மாதிரி காபி இனாம்.

தி. இராஜகோபால் முதலியார்,
அமிர்த குணபோதினி ஆபீஸ்
302, தங்கசாலை வீதி, மதராஸ்

Published by V. M. Parthasarathy Iyengar,
for "JAGANMOHINI OFFICE"
[PRI]NTED AT THE TATA PRESS, MADRAS.

3—வது அதிகாரம்

மதியில்லா மாணவன்

தன்னைத் திருடனென்றுப் பிடித்துக்கொண்டு உதைப்பதைக் கண்ட தாஞ்சாபகதூர் செய்தி நன்றாய் விளங்காமலும் தான் தேடி வந்த குருவை சிறிதும் மறவாமலும் அதே நினைவு கொண்டு குதிரையை மீண்டும் தடவியவாறு, "ஐயோ! குரு குரு குருவே! இதென்ன சங்கடம்! உங்களுடைய கலையைக் கற்பதற்கு முதலில் உதையும் படவேண்டுமா! அத்தகைய கடினமான காரியமா இது! அப்பாடா! ஐயா என்ன செய்தி! ஏன் என்னைப் பிடித்து உபத்திரவிக்கின்றீர்கள்? நான் என்ன திருடனா! ஐயோ! நானா திருடன்! இதென்ன க்ரகசாரம். நான் திருடனில்லை; நான் பெரிய கீர்த்திமானாக ஆவதற்கு இந்தக் குருவினிடம் கலையைக் கற்க வேண்டி வந்தேன்; வந்த விடத்தில் இவர்தான் காலினால் உதைத்தார் என்றால் நீங்களுமா என்னை வைது அடித்து தொந்தரவு செய்யவேண்டும்? வேண்டாமையா! நான் என்ன சாமானிய மனிதனா! படிப்பின் வாசனையைச் சிறிது மறியாமலேயே உயர்தரமான தாஞ்சாபகதூர் என்கிற பட்டத்தைப் பெற்றுவிட்ட பெரிய மனிதன் அல்லவா! என்னை என்னவென்று எண்ணினீர்கள்? நான் இந்தக் குருவினிடம் கலை கற்க வந்தேனே யன்றி நான் திருட வந்தவனல்ல. என் கையை விடுங்கள்" என்று கூறிக்கொண்டே கையை உதறிக்கொண்டு அந்தக் குதிரையின் காலில் விழுந்து "என் குரு, குரு, குருவே! எனக்கு கலை கற்றுக்கொடுக்கவேண்டும் இல்லாவிட்டால் யான் போகமாட்டேன். என் பெற்றோரின் முன்னிலையில் யான் ஓர் பெரும் கீர்த்தியுடனே சென்றால்தான் என் மனது நிம்மதி யடையும்" என்று கூறியபடி மற்றயோரை நோக்கி "யான் கலையைத் திருட வரவில்லை; கலை இந்த புண்ணியவானின் வயிறு நிறைய அடைபட்டுக் கிடக்கின்றது. அதோடு 'தா! தை! தக்கத்தை!' என்று கூத்தாடுகின்றது. அந்த [illegible] ரகஸியத்தை யானே கண்டுபிடித்துவிட்டேன் அதை[illegible]

பிடித்தமாத்திரத்தில் என் வயிற்றிலும் கலை சிறிது ஆடுகின்றது. இன்னும் முற்றிலும் கலையைக் கற்பதற்குள் நீங்களெல்லாம் என்னைத் தடுக்காதீர்கள். என் குரு குரு குருவை யான் ஒரு ஒரு ஒரு நிமிடமும் விடமாட்டேன். போங்கள்" என்று கூறிக் கொண்டே குதிரையைச் சுற்றிச் சுற்றி வலம் வந்து விழுந்து விழுந்து பணிந்து "சுவாமி! குரு குரு குரு சுவாமீ! நான் திருடனாம். உம்மைத் திருட வந்தேனாம் முன்னால் எதையோ நான் திருடிவிட்டேனாம். இதெல்லாம் என்ன சுவாமி! இவை எல்லாம் சாதாரண மனிதர் கூறும் வார்த்தையா! அல்லது கலையின் முதல் ஆரம்பம் இதுதானா! இது எனக்குத் தெரியவில்லையே! கலையாயின் என் வயிறு பெருக்கவில்லையே! உமது வயிறுமட்டும் பெருத்த கோணி மூட்டையைப் போல விருக்கின்றதே! அதுபோல எனக்கும் கலை நிறையும்படிச் செய்தால்தான் யான் உம்மை விடுவேன்." என்று கூறிக்கொண்டே அந்தக் குதிரையைத் தட்டுகிறான்; தடவுகிறான். அதன் வயிற்றில் கையை வைத்துத் தடவிய வண்ணம் "ஆகா! கலையே! ஓகோ! கலையே! கலை, கலை, கலை, தக்கத்தை! தாதை! ததிகிணதோம். தீம் தீம்" என்று கூச்சலிட்டு மெய் மறந்த ஆநந்தத்துடன் தேகத்தை ஆட்டியும் வளைத்தும் முகத்தைப் பல விதமான கோணல் செய்துக் கூத்தாடுகிறான்.

அப்போது குதிரை கனைத்தது. இதைக்கேட்ட தாஞ்சாபகனாருக்கு ஆச்சரியமும் ஆநந்தமும் பொங்கி வழிந்துவிட்டன. முன்னிலும் மதிகரித்த களிப்புடன் கூத்தாடியவாறு "ஆ! ஆ! தெரிந்துகொண்டேன், தெரிந்துகொண்டேன்! நாம் வேண்டுவதற்கு மனமிரங்கிய குரு கலையை சொல்லிக்கொடுக்க ஆரம்பித்துவிட்டார். பேஷ்! பேஷ்! இந்த கலையின் பாஷையே ஒரு புதிய தினுசாக விருக்கின்றதே! கிங் சிங் என்று அவர் சொல்லியதே நாமும் சொல்வோம். அங்கு கண்ட பெரியவர்கூட குருவின் சொற்படியே நடக்க வேண்டுமென்று சொல்லியிருக்கிறார். ஆகையால் நாம் கட்டாயம் [illegible] கலை கற்கவேண்டும்" என்று கூறிய படியே குதிரை கனைத்தது போலவே கனைத்துக்கொண்டு அந்த [illegible]யைச் சுற்றி வந்து தாண்டவம் செய்கிறான்.

853

இந்த அதி யாச்சரியமான மூடாத்மாவைக் கண்ட அங்கு வந்த எல்லோரும் முதலில் கள்ளனென்று மதித்துப் பிடித்தார்களே யன்றி அவனுடைய மூடத் தன்மையினால் அவன் கூறும் வார்த்தை களையும் செய்கைகளையும் கண்டு வியந்து குலுங்கக் குலுங்க நகைத்துக்கொண்டே இந்த வேடிக்கையை முற்றும் பார்க்க எண்ணி அவனை அதற்குமேல் ஏதும் செய்யாமல் விட்டுவிட்டு அந்த விநோதக் கூற்றைப் பார்த்துக்கொண்டே நின்றார்கள். அவன் குதிரையைப்போல ஓயாது கனைத்துக்கொண்டு அதைப் பிரத க்ஷணம் செய்து தொழுவதை நோக்க எல்லோருடைய நகைப்பும் கரைபுரண்டு அண்டத்தை அளாவிவிட்டது. அந்த அளாவலானது எவ்விதமிருந்ததெனில், இத்தகைய மூடாத்மாவைக் காண மேலு லகத்திலிருப்பவர்களையும் அன்பா யழைப்பதே போல விருந்தது. பையன் அந்தக் குதிரை கனைத்தது போலவே கனைத்துக்கொண்டு சிலைபோல நின்றுவிட்டான். அவ்வமயம் ஏககாலத்தில் இடி இடிப்பது போல அங்கு கூடியுள்ள ஏனையோரும் நகைத்த சத்தத் தைக் கேட்டு பையன் திடுக்கிட்டுக் கண்ணைத்திறந்து பார்த்தான். எல்லோரும் நகைப்பதை நோக்கினான். "ஒருக்கால் இதுவும் இந்த குரு குரு சுவாமி கலைகளில் ஒன்றோ என்னவோ! அதனால்தான் நகைக்கின்றார்கள். நாமும் அதுபோல நகைக்கவேண்டுமா! நம்மை நகைக்கும்படியாக குரு கூறவில்லை யாதலால் நாம் நகைக்க வேண்டாம்" என்று தனக்குள்ளாகவே சகலவித தீர்மானமும் செய்துகொண்டவனாய் அவர்களை எல்லாம் ஏற இறங்க உற்றுக் கவனித்தான்.

அவர்களில் தொப்பை தள்ளிய பேர்வழிகள் சிலர் நிற்கக் கண்டுவிட்டான். அவ்வளவு தான் அவனது சந்தோஷம் உச்ச நிலையை அடைந்துவிட்டது. 'ஓ, ஓ! என்று ஆர்ப்பரித்த வண்ணம் அத்தொப்பை யாசாமி யருகில் சென்று அந்தத் தொப்பையை தனது இரு கரத்தினாலும் தடவிய வண்ணம் "ஆ! ஆ! கலைகள் நிறைந்த தொப்பைதான் இது! என்னகலை! என்னகலை. ஏனையா நீங்களும் இந்த மகானிடம் தான் சிட்ஷை விருந்தீரோ! அதனால் தா[illegible] உங்கள் வயிறும் கலைமயமாகிவிட்டது போலும்" என்று [illegible]

கொண்டே தடவுகிறான். இதைக்கண்ட எல்லோரும் நகைத்த வண்ணமாக அவனைத் தடுக்காது நிற்கிறார்கள். தொப்பை யுடைய மனிதரும் சற்றும் முகங்கோணாமல் இவனது மூடமதி இன்னும் எவ்வளவு தூரந்தான் போகிறது பார்ப்போம் என்று எண்ணி குலுங்கக் குலுங்க நகைக்கின்றார்.

அவர் அபாரமாக நகைப்பதால் தொந்தியும்கூட ஆடுகின்றது. இந்த ஆட்டத்தைக் கண்ட தாஞ்சாபகதூர் சொல்லொணாவியப்பை அடைந்து ஆநந்த நிர்த்தனமாடியவண்ணம் “ ஆகா! குருவின் வயிற்றில் கலை ஆடியதுபோல இவருடைய வயிற்றிலும் கலை ஆடுகின்றதே! பெரிய கலைதான்! பெரிய கலைதான்! ஆகா! நாம் எப்போது கலை கற்று இவ்விதமாவது” என்று கூறிக்கொண்டே தன் வயிற்றைத் தடவுகிறான்; உதட்டை பிதுக்கிப் பீச் பீச் என்கிறான். இந்த வைபவத்தைக் கண்ட அந்தத் தொந்தி மனிதர் இவனை நோக்கி “ஏனடா தம்பீ! நீ மகா புத்திசாலியாகக் காணப்படுகிறாயே! இந்த மகானைக் கண்டு அவரிடம் சீடனாக அடையும்படி உனக்கு உபதேசம் செய்த மனிதர் யாரப்பா! அவரைச் சற்று தெரிவி பார்ப்போம்” என்றார்.

இதைக் கேட்டுப் பையன் வெகு சந்தோஷத்துடன் ஆநந்த நிர்த்தனம் செய்துகொண்டே தான் மூஞ்சூறு பிடிக்க வந்தது முதல் இதுபரியந்தமான சகல விஷயங்களையும் கூறி அதிசயமான பார்வையுடன் தொந்தி மனிதரை நோக்கி “ஏனையா! உங்களுக்குக் கூட அந்த மனிதர் தான் உபதேசம் செய்தாரா! தாங்கள் எந்த விதமாகக் கல்வியைக் கற்றீர்கள்?” என்றான்.

இந்த அத்புதமானதும் ஜகத்தில் கண்டிராததும் கேட்டிராததுமான மூடத்தனத்தைக் கொண்டு செய்த காரியங்களையும் அவனைப் பிறர் ஏமாற்றியதையும், உண்மையிலேயே ஓர் சாது காக்காயா! அரி! அரி! என்று சிலேடையான வாக்யத்தை உபதேசித்துச் சென்றும் மந்தமதியானவன் அதையறியாது குதிரையைக் குரு ...ன்று எண்ணிக்கண் மூடியாகப் பிதற்றுவதையும் கண்டும் கேட்...ர்களுடைய நகைப்பும் அதிகரித்ததன் பயனாக வயிறும் வலி

கொள்ளத் தொடங்கியது "ஐயோ பாவம்! இந்த மூடாத்மாவைத் திருடன் என்று எண்ணிக் கூறியது பிசகேயாகும், இவ்வித மான மதிசூனியமாகி விடும்படிக்கும் பெற்றோர்கள் பிள்ளைகளை வளப்பார்களா! சேச்சே! கேவலமான அறியாமையைப் போக்கக் கூடியவழியை ஒரு சிறிதும் புகட்டாது பயித்தியமாக விட்டுவிடவும் ஈன்றோரின் குடலும் மனமும் துணிந்ததே! அவர்கள் உண்மையில் மிருகமா? மிருகத்தன்மையை யுடைய மனிதர்களோ!" என்று பலவாறு பேசிக்கொண்டே பையனை நோக்கி, "அப்பா! தம்பி! நீ மெத்த கெட்டிக்காரன்தான். உன்னைப்போன்ற சாமார்த்தியசாலிகளாகவே பிள்ளைகளை வளர்த்து விட்டால் நமது நாடு கூடிய சீக்கிரத்தில் நன்மை யடைந்து முன்னேற்ற மடைந்து விடும். உன்னைப் பெற்றவர்கள்; வயிற்றிற்குப் பிரண்டையையும் பச்சை மிளகாயையும் அரைத்துக் கட்டினாலும் தீராது. மக்களுக்கு மாதா பிதாக்களால் உண்டாகவேண்டியவை நல்ல அறிவும், கல்வித்; திறமும், தெய்வ பக்தியுமேயாம். அத்தகைய பொருள்களை தாமீன்ற மக்களுக்குத் தாமே புகட்டாது விட்டுவிட்டால் அந்த மக்களின் கதி யாதாவது? தம் மக்களைச் சிலர் வெகு செல்லமாக வளர்க்கும் பாவனையால் அவர்களை கல்வி என்னும் ஆகாராதிகளால் வளர்க்காது வயிறு வெடிக்கும்படியாக உணவை யிட்டு நாழிக் கொரு கோலம் செய்து விளையாட்டிப் பார்ப்பதன் பயன் இறுதியில் இவ்விதமே ஆகிறது. சிலர் இன்னும் சில வருடம் கழித்துப் பள்ளிக் கனுப்பலாம்; இப்போது செல்வதால் குழந்தை இளைத்துவிடுவான் என்றும், மற்றும் சிலர் ஏதோ மக்களைப் பெற்றோம் செக்கிற்குக் கொட்டுவதுபோல வயிற்றுக்குக் கொட்டி விட்டால் பிள்ளை மிக்க நலனை யடைந்துவிடுவதாக எண்ணி அவனுடைய அறிவை வ்ருத்தியாக்கும் பொருட்டு ஒரு சிறிது கவலையும் கொள்வதே இல்லை. பின்னும் சிலர் மக்களைக் கல்விச் சாலையில் ஒப்புக்காக சேர்த்துவிடுவதும் அந்தப் பையன் கையில் புத்தகம் பிடிக்கும் நேரத்தை நித்திரை செய்யும் இராக்காலத்திலும் அவன் எதிர் பார்க்க முடியாத விதம் சதா அதைச் செய். இதைச் செய்; அங்கு சென்றுவா; இங்கு சென்றுவா; என்று வேலை ஏவிக் கொண்டே இருக்கிறார்கள். இவ்வித மிருப்பின் பிள்ளையின்

விருத்தியாகும் வழி தானுண்டா! அல்லது கேவலம் ஓர் எந்திரம் போல அப்பிள்ளையை உழைக்கச் செய்தால் அவனுடைய சுகாதாரந் தான் எவ்விதமிருக்கும்? இங்ஙன முள்ள பெற்றோருக்கு, கல்விச் சாலைக்கு அளிக்கப்படும் பணமும் நஷ்டமே! பிள்ளையின் ஆரோக்யம் குறைவதால் மனத்திற்கும் கஷ்டமே! பிள்ளையோ தாய் தந்தையரிட்டக் கட்டளையைச் செய்வதா! அன்றி தன் பாடங்களைப் படிப்பதா, இரண்டையும் செய்யும்படியான அவகாசம் என்னவோ கிடைப்பதில்லை. நித்திரை செய்யும் காலத்தில் கண் விழித்துப் படிப்பதற்கு நித்திராதேவியும் இரக்கமின்றி 'பெற்றெடுத்தத் தாய் தந்தையர்களே மக்களின் அபிவிருத்தியையும் கல்வி வளர்ச்சியையும் கவனியாது வாட்டி வருத்துகையில் நாம் ஏன் பின்னடைய வேண்டும். நமது வேலையை நாமும் செய்வோம்' என்று எண்ணி தன் வசம் செய்துக்கொண்டுவிடுகிறாள். பையன் தூக்கத்தை எவ்விதமேனும் தடுக்க முயன்று தடுத்த வண்ணம் படித்தாலும் அப் படிப்பெல்லாம் தூங்கு மூஞ்சியாகவே அமைந்து பரிக்ஷை காலங்களில் கோழி வளர்க்காமலேயே கோழியின் முட்டையை சம்பாதித்து விடுகிறான்.

பையன் பரிக்ஷையில் பாஸ் செய்யவில்லையே என்று பெற்றோர் வருந்தி பையனைத் திட்டுவதில் பயனுண்டோ! தாமே அத்தோல்விக்குக் காரண மென்பதை ஒரு சிறிது அப்போதேனு முணர்ந்து கொண்டு மறு வருடத்திலேனும் பையனை வேலை ஏவாது படிக்க விடுகிறார்களா! அதையும் காணவில்லை. தாம் பையனைப் படிக்க விடாத குற்றம் தமக்குச் சிறிதும் தெரிவதில்லை. பையனைத் தாமே பலவிதத்திலும் முட்டாளாக்கி விடுவதோடு பையனுக்கு புத்தியில்லை என்றும் சோம்பேறி எனறும் வாய் கூசாது கூறும் பெற்றோரையும் எத்தனையோ விடங்களில் பார்த்திருக்கிறோம். பிள்ளைப் பெற்றதின் பலன் அவர்களிடம் பூர்ணமாக வேலை வாங்குவதே யாகும் என்று கருதி யிருக்கிறார்க ளென்றே அத்தகையோரை எண்ணவேண்டும். தாம் வாங்கும் வேலைகளில் சிறிது குறைத்துக்கொண்டு அவனுடைய படிப்பின் விஷயத்தையும் தமக்கான ஓர் வேலை என்றே எண்ணி அதையும் சிறிது

கவனித்தால் அதனுல் எத்தனை நன்மைகளைப் பிற்காலத்தில் பைய னும் பையனுல் பெற்ருேரும் அடையலா மென்பதை சிறிது கூர்ந்து யோசித்தால் பெற்ருேர்களே பிள்ளையைப் பாழாக்க மாட்டார்கள்.

வேறு சிலர் மக்களை பெற்றுவிட்டதால் தமக்கு மலட்டுத் தன்மை நீங்கிவிட்டதென்று எண்ணி அவர்களுடைய சுக துக்கங் களை எதுவுமே கவனியாது வேளா வேளை அன்னத்தை மட்டும் சன்னம் செய்யாது அளித்துவிடுவதுடன் விவாகத்தையும் செய்து விட்டு அந்திய காலத்தில் திடீரென்று விழித்துக்கொண்டு பையன் சம்பாதிக்கவில்லை என்றும் தம்மைக் காக்கா விடினும் தனது குடும்பத்தையும் ரக்ஷிக்கக் கூடாத கையா லாகாதவனுயிருக்கிருன் என்றும் தாமே வைவதையும் நாம் காதால் கேட்டுள்ளோம். இப்போது தோன்றும் யோசனை அப்போதே பிறந்திருந்தால் தமது மக்களைக் கேவலம் பூனை நாய் முதலிய ஜந்துக்களை வளர்ப் பதைப் போல வளர்ப்பார்களா! ஆதியில் தான் கேவலம் மூடாத்மா வாக வளர்த்துவிட்டு அந்திமத்தில் பிள்ளை பெருந்தகையா ளனுயும் அறிவாளனுயும் ஆகி சம்பாதிக்க வேண்டுமென்ருல் எவ்விதம் கூடும்? இவைபோன்ற விசித்திரங்கள் உலகத்தில் கணக் கிலிட வியலாத விதமாக எத்தனையோ கிடக்கின்றன. அவை களையே நாம் கூறிக்கொண்டு போவதென்ருல் பொழுது போய் விடும். மேல் குறித்த பெற்ருேர்களைவிட இன்னும் மகாமேதாவி களாகவே உன் பெற்ருேரு மிருக்கவேண்டும் மூஞ்சூறு இன்ன தென்று அறிவிக்காதவர்கள் ஓர் பெற்ருேராக ஆய்விடும் யோக்கிய தையை ஈசன் எவ்விதமோ அளித்து விட்டாரே! அப்பா! சிதம்பரம்! உன்னையோர் கேவலமான ஜந்துவை வளர்ப்பதுபோல உன் பெற்ருேர் வளர்த்துவிட்டதன் பயனே இவ்விதம் குதிரை என்றும் பூனை என்றும் கூட பகுத்தறிவு தெரியாமல் பாழாய்ப் போய்விட்டாய். இது ஓர் குதிரை என்னும் மிருகம். நீ இப் போதே உன் ஊரை யடையவேண்டுமாயின் தகுந்த துணையுடன் அனுப்புகின்றேன், அல்லது கேவலமாக உன்னை இதுகாறும் வளர்த்ததே போல இன்னுமுள்ள உனது வாழ் நாட்க

இவ்விதமே பாழாகச் செய்துவிடும் உன் பெற்றோரிடம் செல்லாது ஓர் சற் குருவை யடைந்து அவரிடம் சீடத்வம் வகித்து நீ பிறந்ததற்கு அடையவேண்டிய மார்க்கங்களை கற்றுக்கொண்டு முன் மகான் தெரிவித்ததுபோல புகழுடனும் கீர்த்தி யுடனும் உனது பெற்றோரைக் காணுகின்றாயா! உனது மனப்பூர்வமான அபிப்ராயத்தைக் கூறு" என்று வெகு உருக்கமாயும் அன்புடனும் அனுதாபத்துடனும் கேட்டார்கள்.

இவைகளையெல்லாம் கேட்ட பையனுக்கு ஒன்றுமே புலப்படவில்லை. ஏதோ பேசுவது போலத் தோற்றுகின்றதே யன்றி இன்னது பேசுவதாக அவனுக்கு விளங்கவே இல்லை. கடைசியில் கேட்ட வார்த்தையை மட்டும் தெரிந்துகொண்டான். அதன்மேல் அவன் அவர்களை நோக்கி, "ஐயா! நான் ஓர் பெருத்த கலை கற்று வயிறு பெருத்த பிறகு தான் என் பெற்றோரிடம் செல்வேன். ஆகையால் யான் இப்போது போகவில்லை" என்றான்.

இது கேட்ட அவ் வீட்டுக்காரன் பையனை நோக்கி "அப்பா! சிதம்பரம் உன்னிஷ்டப்படியே நீ நன்றாக படித்துப் பெரிய புகழும் கீர்த்தியும் பெற்று பின்னர் உனது பெற்றோரிடம் செல்லலாம். இந்த மிருகம் உனக்கு உபதேசம் செய்விக்கும் குருவாகாது. ஆதலின் யான் உன்னை அடுத்த ஊரிலிருக்கும் ஓர் பாடசாலையில் கொண்டு சேர்ப்பிக்கின்றேன். அங்குள்ள குருவினிடத்தில் பாடங்களைச் செவ்வனே கற்று பாண்டித்யமடைந்து உன்னறிவை விருத்தி செய்துகொண்டு இனிமேலாவது புத்திமானாக விளங்குவதுடன் கடவுள் என்று ஒருவர் உண்டு என்றும் அக்கடவுளைப் பஜித்தால் நித்ய பதவியை அடையலாம் என்பதையும் நன்றாகத் தெரிந்துகொண்டு உன் காலத்தைக் கடத்து. என்னுடன் கூட வா!" என்று கனிகரத்துடன் அழைத்தான்.

இதுகேட்ட தாஞ்சா பகதூர் "ஐயா! என்னை உங்களுடன் கூட அழைக்கின்றீர்களா! ஆனால் இந்த மிருக குருவை விட்டுவிட வேண்டுமா! இவர் வயிற்றில் ஆடுவதே போல நீங்கள் காட்டப் ...கும் குருவினிடத்திலும் கலைகள் ஆடுமா! அப்படியாயின் சரி.

வருகிறேன். என்று கூறி குதிரையை நோக்கி, "ஓய்! குரு மிருகமே! நான் வேறு குரு குரு குருவிடம் போகிறேன். என்னை உதைத்ததை யான் மறக்கமாட்டேன். போய் வருகிறேன்" என்று கூறிக்கொண்டே அவ் வீட்டுக்காரனுடன் சென்றான்.

அவன் பையனை தன் வீட்டினுள் அழைத்துக் சென்று வயிறார அன்னமிட்டு இரவு தன் வீட்டிலேயே நித்திரை கொள்ளச் செய்து விடியற்காலம் பையனை அழைத்துக்கொண்டு அடுத்த ஊரிலுள்ள ஒரு பாடசாலைக்குச் சென்று உபாத்தியாயரைக் கண்டு வணங்கி அவரிடம் பையன் வரலாற்றையும் மந்தமதியை யும் கூறி 'இந்தப் பையனை தாங்கள் க்ரகத்திலேயே பணியாள் போலவும் உபயோகித்துக்கொண்டு கல்வி பயிலச் செய்யவேண்டும்.' என்றுகூறி ஒப்பிவித்துவிட்டுப் பையனை நோக்கி "அப்பா! சிதம் பரம்! நான் சென்று வருகிறேன்; இவர் தான் உனக்குத் தந்தை; இவர் பத்தினி தான் உன் தாயார்; இவர் மக்களும் மற்றைய படிக்க வரும் பிள்ளைகளும் தான் உனது உடன் பிறந்தோரும் சினேகிதர் களும்; இவ் வீடுதான் உனது சொந்த வீடு; ஆகையால் மேற் குறித்தவர்களிடம் வெகு பய பக்தியுடனும் அவர்கள் பேச்சுக்கு மறு பேச்சின்றி அவர்களின் இஷ்டம் போலவும் கட்டளைப் படிக்கும் நடந்துகொண்டு குருவினுலும், அவர் பத்தினி, மக்களாலும் இடப் படும் வேலைகளைச் சிரத்தையுடன் செய்துகொண்டு மிகுதியான நேரங்களில் உனது பாடங்களைப் படித்து நன்றாக புத்திமான் என் றும், குருவிற்குகந்த சீடன் என்றும் பெயர் வகித்து வரவேண்டும்; நான் சென்று வருகிறேன். யான் கூறியது தெரிந்ததா!" என்றான்.

சிதம்பரம்:—ஆகா! தெரிந்துவிட்டது, ஆமாம் சுவாமி! ஒரு சந்தேகம்! அதாவது அந்த மிருக குருவின் வயிற்றில் ஆடியது போல இவர் வயிற்றில் ஆடவில்லையே! இவர் வயிறு நம்முடையது போலவே இருக்கிறதே! அதேன்?

வந்தவன்:—ஐயோ! கர்மமே அடேய் மூட முண்டமே! அந்த குதிரையின் வயிற்றில் கலையா ஆடுகின்றது! குட்டி யல்லவே முட்டிற்று. அதையேன் மீண்டும் எண்ணுகிறாய்? இ

தேகம் முற்றும் கலையே நிரம்பி யிருக்கிறது. ஆகையால் இவர் தான் குரு; நான் சென்று வருகிறேன்- ஜாக்ரதையாக விரு அள்ளாதே! திருடாதே! திட்டாதே! பிள்ளைகளை அடிக்காதே! வெகு குணவானாக விளங்கு நான் சென்று வருகிறேன்'' என்று கூறி விட்டு பாடசாலை உபாத்தியாயரிடமும் கூறிக்கொண்டுப் போய் விட்டான்.

பிறகு சிதம்பரம் உபாத்தியாயரையும் அவருடைய சம்சாரத்தையும் வணங்கி எழுந்து "ஐயா! குரு குரு குருவே! அம்மா! குரு குரு குருவே! எனக்குக் கலையை அறிவிக்கவேண்டும்; நான் கலைகளைக் கற்று பெரிய கீர்த்திமானாயும் அபாரமான பாண்டித்யம் நிரம்பப் பெற்றவனாயும் ஆகிவிடவேண்டும் அவ்விதம் ஆவதற்கு எத்தனை நாள் வேண்டும்? என்றான்.

இதுகேட்ட இருவரும் நகைத்துக்கொண்டே 'இந்த மூடத்தை நாம் திருத்துவதில் தான் இருக்கிறது' என்று நினைத்துக் கொண்டே பையனை நோக்கி, "சிதம்பரம்! நீ எவ்வளவு சீக்கிரம் படிக்கின்றாயோ அவ்வளவு சீக்கிரம் பண்டிதனாக ஆவாய். நன்றாக சாமர்த்தியமாய் பயிலுவதில் தான் யாவு மிருக்கின்றது சரி நீ முதலில் ஸ்நானம் செய்துவிட்டு போஜனம் செய்துக்கொள். பிறகு உனக்கு அக்ஷராப்யாசம் செய்கிறேன். பிள்ளைகளும் வந்துவிடுவார்கள்'' என்றார். உடனே தாஞ்சாபகதூர் ஸ்நானம் செய்துவிட்டு குரு பத்னியினால் இடப்பட்ட உணவை யுட்கொண்டு உபாத்தியாயர் முன்னிலையில் வந்து நின்றான். சரியாக 10 மணிக்கு மற்றைய பிள்ளைகள் வந்து சேர்ந்தார்கள். யாவரும் இப் புதிய பிள்ளையாகிய நமது தாஞ்சாபகதூரைக் கண்டு அவன் அன்றுதான் வந்த புதிய பையன் என்பதை உபாத்தியாயரின் மூலம் விசாரித்தறிந்தார்கள்.

அன்று உபாத்தியாயர் தாஞ்சாபகதூரை அருகி லழைத்து அ, ஆ, இ, ஈ' முதலிய அக்ஷரங்களை முறையே எழுதிக் கொடுத்து அதை உரத்த குரலால் 'அ, ஆ, இ, ஈ, என்று சொல்லிக்' [illegible]த்து அதை அவ்வாறே உச்சரித்துக்கொண்டு எழுது. அவை

கள் நன்றாக வந்துவிட்ட பின்னர் மேலே எழுதித் தருகிறேன்'' என்றார். தாஞ்சாபகதூரும் அந்தப் பலகையை வாங்கிக்கொண்டு உபாத்தியாயர் எழுதிய தன் மீதிலேயே அழுத்தமாக பலபத்தைப் பிடித்து எழுதிக் கொண்டே 'அ, ஆ, இ, ஈ' என்று அண்டத்தை அளாவும் படியாக பெருத்த கூச்சலிட்டுக் கொண்டே எழுதுகின்றான்.

இவன் போடும் கூச்சலைக் கண்ட மற்றைய பிள்ளைகளெல்லாம் நகைக்கின்றார்கள். உபாத்தியாயர் கூறுவது பிள்ளைகளுக்கும் பிள்ளைகள் கூறுவது உபாத்தியாயருக்கும் செவியில் படாதவாறு செவிகள் செவிடுபடும்படிக்கு அ, ஆ, இ, ஈ, என்று தாஞ்சாபகதூர் கூச்சிலிடுவதைச் சிறிதும் நிறுத்தவில்லை. இது கண்ட உபாத்தியாயர் சட்டாம் பிள்ளையை நோக்கி "அடேய் அந்தப் புதிய பையனை சத்தமிடாது வாசிக்கச் சொல்லு "என்றார். சட்டாம் பிள்ளையும் தாஞ்சாபகதூரிடம் வந்து "அப்பா! சிதம்பரம்! உபாத்தியாயர் உன்னைச் சத்த மிடாது படிக்கச் சொன்னார்'' என்றான்.

இதைக் கேட்ட சிதம்பரம் அப்படியே ஆகட்டு மென்று தலையை ஆட்டியனுப்பி விட்டு "அ. ஆ. இ. ஈ; அப்பா! சிதம்பரம்! உபாத்தியாயர் உன்னைச் சத்தமிடாது படிக்கச் சொன்னார். அ. ஆ. இ. ஈ அப்பா சிதம்பரம் உபாத்தியாயர் உன்னைச் சத்தமிடாது படிக்கச் சொன்னார்'' என்றுசட்டாம் பிள்ளை கூறிய வார்த்தையையும் சேர்த்துக் கொண்டு ஓவென்றுக் கத்தித் தொண்டை கிழிந்து விடும்படி சத்தமிட்டுப் படிக்கத் தொடங்கி விட்டான்.

இதைக் கண்ட மற்ற பிள்ளைகளும் உபாத்தியாயரும் வயிறு குலுங்க நகைத்து இவனுடைய மூடத்தன்மையை எண்ணி சிறிது வருந்தினார்கள். பின்னர் உபாத்தியாயர் சிதம்பரத்தை அருகில் அழைத்து "அடேய். சிதம்பரம்! உனக்கு எழுதிக் கொடுத்த அக்ஷரங்களை நீ சத்தம் செய்யாது மனதிற்குள்ளாகவே படித்துக் கொள் அவ்விதம் செய்யாவிட்டால் அடி தான் விழும் தெரியுமா!'' என்றார் இது கேட்ட சிதம்பரம் அடி என்பதனால் பயமடைந்து அப்...

ஆகட்டும் என்று கூறி தன்னிடம் சென்று உட்கார்ந்து மனத்திற் குள்ளாகவே படித்துக் கொண்டு எழுதினான்.

அன்று சென்று மறுநாள் மீண்டும் பாடசாலையில் பிள்ளைகள் வந்தமர்ந்தார்கள். உபாத்தியாயர் சிதம்பரத்தை அழைத்து "அப்பா! சிதம்பரம்! நேற்றுஎழுதிக் கொடுத்த எழுத்துக்களை இப் பலகையில் எழுதிப் படி" என்றார். உடனே சிதம்பரம் அந் நான்கு எழுத் துக்களையும் எழுதிக் காட்டி தன் மனத்திற்குள்ளேயே' அ. ஆ. இ. ஈ, என்று படித்தான். இவன் படிப்பதை யறியாத உபாத்தியாயர் "அடே சிதம்பரம் என்ன விது எழுத்தைப் படிக்காமல் நிற்கின் றாயே!" என்றார்.

சிதம்பரம்:—உபாத்தியாயரே! தாங்கள் கூறியதே போல மனத்திற்குள்ளாகவே படிக்கின்றேனே! குரு வார்த்தைப் படி நட க்க வேண்டுமென்று அவர் சொல்ல வில்லையா! நான் உரக்கப் படித் தால் அடிப்பதாக நேற்று கூறியதை யான் மறக்க மாட்டேன்; ஆகையினால் நான் உரக்கப் படிக்க மாட்டேன்.

உபாத்தியாயர்:—ஐயோ! மூடாத்மாவே! நான் எப்போது எவ் விதம் செய்யச் சொல்லுகிறேனோ; அதை அவ்விதமே செய்ய வேண்டும். இப்போது உரக்கப்படி.

சிதம்பரம்:—அப்புறம் அடிக்கக் கூடாது; அதற்குத் தான் இப் போதே சொல்லுகிறேன்.

உபாத்தியாயர்:—அட சனியனே! நான் கேட்கும் போது சொ ல்லித் தொலையடா! உன்னை யடிக்கவில்லை.

சிதம்பரம்:—ஆனால் சொல்லுகிறேன். அ. ஆ. இ. ஈ என்று பெருத்த கூச்சலிட்டுக் கத்தினான். இதைக் கேட்ட உபாத்தியாயர் அடங்கா நகைப்புடன், "அடேய் சிதம்பரம்! உரக்கக் கூறுவதென் றால் இவ்விதமாகவா கத்துகிறது! சற்று நிதானமாய் இனி மேல் கூறு; சரி இதற்கு மேலுள்ள அக்ஷரத்தை எழுதித் தருகிறேன். ஊ. எ. ஏ. என்று மெல்ல கூறிக்கொண்டே எழுது" என்றார். ...மே எழுதுவதாக பலகையைப் பெற்றுக் கொண்டு

தன்னிருப்பிடத்தில் வந்து உட்கார்ந்துகொண்டு அதிகமாக சத்தமிடாமல் படித்து எழுதியவாறு அங்கு பிள்ளைகளுக்கு பாடம் நடக்கும் வேடிக்கையைப் பார்த்துக் கொண்டே இருந்தான். உபாத்தியாயர் எல்லா பிள்ளைகளையும் வரிசையாக நிற்கச்செய்து "அரியை மறவேல். ஆற்றலைக் கைவிடேல்"......என்ற பாடங்களைச் சொல்லிக்கொடுக்க அதைப் பிள்ளைகள் சொல்லுவதை நமது தாஞ்சாபகதூர் பார்த்ததும் அவனுடைய ஆச்சரியத்திற்கு அளவே இல்லை. இவ்விதம் உபாத்தியாயர் சொல்வதை நாம் எப்போது சொல்வது என்று யோசனை யுண்டாகிவிட்டது. அவ்வித யோசனையுடன் அன்று செல்ல மறுநாள் பாடசாலை கூடிற்று.

உபாத்தியாயர் சிதம்பரத்தை யழைத்து "அடேய்! உன் பாடத்தை எழுதிவிட்டாயா?" என்றார் நமது சிதம்பரத்துக்கு முதல் நாள் வாத்தியார் கூறியதை பிள்ளைகள் கூறியதேபோல நாம் எப்போது கற்போம் என்கிற எண்ணமே மனத்தினில் இருந்ததால் அதே நினைவாக அவன் "அடேய் உன் பாடத்தை எழுதிவிட்டாயா?" என்றான். இதைக் கேட்ட உபாத்தியாயருக்கு ஒருபுறம் கோபமும் ஒருபுறம் நகைப்பும் உண்டாகிவிட்டது. மீண்டும் பல்லைக் கடித்துக்கொண்டே "தடிப்பயலே! கேட்பதற்கு பதிலைக் காணோம் ஏதோ பிதற்றுகிறாயா! பாடத்தை எழுதினாயா, இல்லையா?" என்றார். இதைக் கேட்ட சிதம்பரம் உபாத்தியாயரைவிட அதிகமாக பல்லைக் கடித்துக்கொண்டு, "தடிப்பயலே! கேட்பதற்கு பதிலைக் காணோம்; ஏதோ பிதற்றுகின்றாயா! பாடத்தை எழுதினாயா இல்லையா?" என்றான். இந்த வினோதத்தைக் கண்ட மற்றப் பிள்ளைகளெல்லாம் நகைக்கின்றார்கள்.

உபாத்தியாயர்:—அடேய் நாயே! உனக்கு அடி வேண்டுமோ?

சிதம்பரம்:—அடேய்! நாயே! உனக்கு அடி வேண்டுமோ?

உபாத்தியாயர்:—படவாப் பயலே! பார் இதோ உன்னை என்ன செய்கிறேன்—என்று கூறியபடி தமது கையிலிருந்த பிரம்பினால் சுளீர் என்று இரண்டு அடிகள் விட்டார்.

அந்தோ! பாவம்! மூடாத்மாவாகிய சிதம்பரம் அடியைச்சகிக்காது குதித்தவாறு "படவாப் பயலே! பார் இதோ உன்னை என்ன செய்கிறேன்?" என்று கூறினன். இதைக்கேட்ட உபாத்தியாயர் மனம் வருந்தி "ஐயோ விதியே! இதென்ன சனியனுக வந்து லபித்ததே!" என்று கூறியவாறு அவனைத் தரதர வென்று உள்ளே இழுத்துச் சென்று அடுப்பி லிருந்த கொள்ளிக் கட்டையை எடுத்து" அடேய் உனக் கினி இந்த சிக்ஷைதான் செய்வேன். தெரியுமா! நான் சொல்வதையே நீயும் எதற்குக் கூறினுய்?" என்ருர்.

சிதம்பரம் நடுநடுங்கிப்போய் "ஐயோ! நேற்று பிள்ளைகளுக்கு நீங்கள் ஏதோ சொன்னீர்கள்; அதை அவர்கள் சொன்னுர்கள். அதேபோல எனக்கும் சொல்லவேண்டுமென்று ஆசையா யிருந்ததால் சொன்னேன்; வேறு ஒன்று மில்லை. எனக்குச் சூடு போட வேண்டாம்" என்று வேண்டினுன். பின்னர் உபாத்தியாயர் அவனை நோக்கி "அடேய் சிதம்பரம்! நேற்று அவர்கள் படித்ததுபோல நீயும் படிப்பதற்குஉனக்கின்னும் ஒரு மாத காலம் செல்லும். அதற்கு மேல் அவ்விதம் நான் சொல்லச்சொல்லும் போது நீ சொல்லலாம்; நீயாக எதுவும் செய்யாதே. தெரியுமா! அவ்வாறு செய்தால் கட்டாயம் சூடுதான் விழும்," என்ருர்.

இதுகேட்ட சிதம்பரம்" சுவாமி! அப்படியே ஆகட்டும். இந்தத் திட்டம் எனக்குமட்டுமா! மற்றவர்களுக்கும் உண்டா!" என்ருன்.

உபாத்தியாயர்:—எல்லோருக்குந்தான் உண்டு. நான்சொல்லாதகாரியத்தை யாரும் செய்தல் கூடாது. செய்தால் சூட்டுக்கோல் தயாராக விருக்கும்—என்ருர். பிறகு சிதம்பரம் தன் பாடத்தை ஒப்புவித்துமேலே அக்ஷரங்களை எழுதி வாங்கிக் கொண்டு தன்னிடம் வந்து அமர்ந்தான்.

உபாத்தியாயர் சிதம்பரத்தைத் தினந்தோறும் தமது வேஷ்டி, தம் பிள்ளைகளின் துணி முதலியவற்றைத் தோய்த்துக் கொண்டு, தண்ணீர்க்குடங்களில் தண்ணீர் நிரப்பிக்கொண்டு [வீட்]டிக்கு வந்து, துணிகளை உலர்த்தி விட்டு தமக்குப்

பூஜைக்கு வேண்டிய உதவிகளைச் செய்வதற்கு கட்டளையிட்டார். உபாத்தியாயர் சொல்லியபடியே நமது சிதம்பரம் நடந்து கொண்டுவருகிறான். உபாத்தியாயரின் பத்தினிக்கு பிரஸவகாலம் வந்துவிட்டதால் அவ்வம்மையார் பிறந்தகம் செல்ல நேர்ந்துவிட்டது. அவர்களின் வயிற்றைக் காணும்போதெல்லாம் நமது தாஞ் சாபகதாரின் நினைவு குதிரையின் மீதே செல்லும். அம்மாளின் வயிற்றிலும் கலை நிரம்பி இருப்பதாகவே இவனுடைய எண்ணம். இதைக் கேட்டுத் தெரிந்து கொள்ள இவன் ஆவல் தூண்டுகின்றது. ஆனால் இதை உபாத்தியாரைக் கேட்பதா, அம்மாளையே கேட்பதா என்ற சந்தேகம் பிறந்து விட்டது. உபாத்தியாயரின் உத்திரவின்றி எதுவும் சொல்லவோ செய்யவோ கூடாதென்ற கட்டளையிருப்பதையும் அதை மீறினால் சூட்டுக் கோலால் சிங்காரம் நடக்குமென்பதையும் அவன் அறிவானுகையால் அதைக் கேட்கப் பயந்து வாளாவிருந்து விட்டான்.

உபாத்தியாயரின் மனைவியும் மக்களும் ஊருக்குப் போய் விட்டார்கள். உபாத்தியாயர் சிதம்பரத்தை உதவிக்குவைத்துக் கொண்டு அவ் விடத்திலேயே இருந்து விட்டார். சிதம்பரத்தை தண்ணீர் கொண்டு வரச் செய்வதும் சாமான்களை எடுத்துக் கொடுக்கச் செய்வதும் தாம் சமையல் செய்வதை அவனுக்குக் கற்றுக்கொடுப்பதும் இவ்விதமே வீட்டு வேலைகளை எல்லாம் அவனை வைத்துக் கொண்டே செய்து வருகிறார். அந்த உபாத்தியாயர் மிகுந்த தெய்வ பக்தியுள்ளவராதலால் தினந்தோறும் பூஜை, ஜபம், தபம் முதலியன செய்துவருவதைத் தவறமாட்டார்.

அவர் மனைவி ஊருக்குச் சென்று 5, 6 தினங்களாகி விட்டன. அவருடைய பூஜா அறையை அந்தம்மாள் தினந்தோறும் சுத்தமாக மெழுகிக் கோலம் போடுவார்கள்; அவர்கள் சென்ற பின்னர் அவ்வறை அவ்வளவு சுத்தமின்றி அசுத்தமாகி விட்டதால் சிதம்பரத்தை நோக்கி "அப்பா! சிதம்பரம்! நான் சமையல் வேலையை முடிப்பதற்கு முன் பூஜையறையை நன்றாக ஒழித்துப் பெருக்கி மெழுகி கோலமிட்டு விட்டு ஜலத்தில் புஷ்பம் போட்டிருக்கிறே-

அதை எடுத்து மாலையாக தொடுத்துக் கொண்டு வந்து வை. சீக்கிர மாகட்டும்'' என்றார்.

உடனே சிதம்பரம் பூஜை அறையை அடைந்து அங்குள்ள சுவாமியுள்பட சகலமானவற்றையும் எடுத்துப் பக்கத்து அறையில் போட்டு விட்டு நன்றாக சுத்தம் செய்து கோலமிட்டு விட்டு உபாத்தி யாயரிடம் வந்து "சுவாமி! எல்லா வேலையும் முடிந்து விட்டது" என் றான். இது கேட்ட உபாத்தியாயர் மகிழ்ச்சியடைந்து "சிதம்பரம்! மாலைகட்டி விட்டாயா!" என்றார் "இதோ செல்கிறேன்; அதற்கு சிறிது நேரமாகும் ஆதலால் சொல்லிக் கொள்ளவந்தேன்." என்று கூறி விட்டு வெளியே சென்று விட்டான்.

உபாத்தியாயர் சமையல் வேலையை முடித்துக் கொண்டு வெகு விரைவுடன் நிவேதன பிரஸாதத்தை எடுத்துக் கொண்டு பூஜை அறையில் வந்து பார்த்தால் அறையில் ஒரு சிறு துரும்பு மின்றி காலியாக விருப்பதையும், சுவாமியையும் காணமல் திடுக்கிட்டு விட்டார். "ஆகா! அவருக்குக் கோபம் வந்துவிட்டது. ஐயோ! கஷ்ட காலமே! இந்த நாசமாய்ப்போனவனைக் கட்டிக் கொண்டு அழவோ என் தலை விதி!" அறையை சுத்தம் செய்து வைக்கச் சொன்னல் சுவாமியையும் எங்கு அப்புறப்படுத்திவிட்டான்? அட க்ரகசாரமே!" என்று தலையிலறைந்து கொண்டே முற்றிலும் தேடி அலைகிறார்; எங்கும் காணவில்லை. பக்கத்து அறையைத் திறந்து பார்த்தார். அங்கு எல்லாச் சாமான்களையும் அடுக்கிவைத்திருப்பது கண்டு அடங்காத ஆத்திரங்கொண்டு "சிதம்பரம் சிதம்பரம்" என்று கூவினர். அவன் வீட்டிலில்லாமையை அறிந்து முன்னிலும் அதிகரித்த வண்ணம் அவ்வறையிலுள்ள சாமான்களை எல்லாம் மெல்ல ஒழித்து அங்கு இருந்த சுவாமியை எடுத்து "ஐயோ! சுவாமி! கடவுளே! அந்த மூடாத்மாவின் செய்கையினல் நான் பெருத்த அபராதியாகி விட்டேனே! என்னையறியாது நேர்ந்து விட்ட இப்பாபத்தை க்ஷமித் தருளவேண்டும்." என்று வேண்டிக்கொண்டே சுவாமிக்கு அபிஷே கம் செய்வித்து பூஜா மண்டபத்தில் எழுந்தருளச் செய்து அர்ச்சனை முதலிய செய்வதற்கு புஷ்பம் வாராமையால் காத்துக்கொண்டிருந் தார். சென்ற சிதம்பரம் இன்னும் வாராமையால் கோபம் அதிகரி த்துவிட்டதுடன் அவன் வரவை எதிர் நோக்கிக் கொண்டிருந்தார்.

விரைக்க விறு விறுக்க நனைந்த ஆடையுடன் சொட்டச் சொட்ட ஈரத்தலையுடனும் கையில் மாலையை ஏந்திக் கொண்டு சிதம்பரம் ஓடி வந்தான். அவனுடைய அலங்கோலத்தைக் கண்டு நெறு நெறு வென்று பல்லைக் கடித்துக் கொண்டே அவன் செய்து சென்ற வேலைகளினுல் உண்டான கோப மதிகரித்து உச்ச நிலை அடைந்து பெருகிவிட்டதால், அந்த ஆத்திரத்தில் அவர் சிதம்பரத்தை தபீர் தபீர் என்று 10 அறை முதுகிலும் துடையிலுமாக கொடுத்தபடியே, “மூட மதியுடைய பீடையே! உன்னை உபகாரத்திற்கு வைத்துக் கொண்டு நான் அடியோடு நாசமாய்ப் போனேன். உபகார மில்லாவிட்டாலும் அபகாரமாயினும் இல்லாதிருக்க லாகாதா! சனியன் பிடித்தவனே! உன்னை இவ் வறையை ஒழித்துப் பெருக்கி மெழுகி கோல மிடச் சொன்னுல் சுவாமியையும் அப்புறப் படுத்திவிட்டாயே! இவ்வித மந்தமதி யுன்னை விட்டு எவ்விதம்தான் தொலையுமோ? ஏன் அவ்விதம் செய்தாய்!” என்று கேட்டு அவனை மீண்டும் புடைத்ததுடன் காதைப் பிடித்து இழுத்து ஆட்டினுர்.

இந்த வேதனையைத் தாங்கமாட்டாத சிதம்பரம், “ஐயோ! ஐயோ! யம்மாடீ! யப்பாடி!” என்று அலறுகின்றுன். ‘காதை விட்டால் செய்தியை உரைக்கின்றேன்’ என்று கத்தினுன். பின்னர் உபாத்தியாயர் காதை விட்டுக் குடுமியைப் பிடித்துக்கொண்டார். பையன் புலம்பியவாறு “சுவாமி! குருவின் வார்த்தைக்கு மறு வார்த்தை பேசலாகா தென்று அன்று அவர் தெரிவிக்கவில்லையா? அதை யான் எண்ணி தாங்கள் ஒழித்துச் செய்யும்படிக் கூறியதைத் தட்டாது அறையில் ஒன்று மிலாது ஒழித்துவிட்டேன். சுவாமி என்பது எது என்றது எனக்குத் தெரியாது; அது தெரிந்தாலும் கூட அதை அவ்விடத்திலேயே வைத்தால் அது ஒழித்ததில் சேரமாட்டாதாகையால் அதையும் எடுத்துவிட்டேன். சுவாமி! நீங்கள் தெரிவித்த சுவாமி எது அதைக் காட்டுங்கள்” என்றுன்.

இவனுடைய மூட மதியைக் கண்டு மனம் சோர்ந்தவாறு ‘அவனை உபாயமான வழியில் திருப்பினுல் [illegible] [illegible]ந்து வருவான், இல்லையேல் அவன் திருந்துவதே அ[illegible]ண்மை’ என்று எண்ணிய உபாத்தியாயர் சுவாமியைக் காட்டி ‘இவர் தான் நம்மைப் பகை

187

கடவுள்; இவரை வணங்கினால் தான் நமக்கு மோக்ஷ முண்டு. இவரை வணங்காதார் எமனுலகிலுள்ள நரகத்திற்குத் தான் ஆளாவார்கள். ஆகையால் இனி நீ காலை மாலை இருவேளைகளிலும் இக் கடவுளை மனதார வணங்கித் தொழ வேண்டும். தெரிந்ததா! சனியனே! தொலை. புஷ்பம் எங்கே? மாலை எங்கே? கொண்டுவா?" என்றார்.

இது கேட்ட தாஞ்சா பகதூர் தன் கையில் துணியினால் மறைத்திருந்த ஓர் மாலையை எடுத்தான். அதை எடுக்கும்போதே நாற்றம் குடலைக் குழப்புகின்றது. அவன் அம்மாலையை எடுத்து உபாத்தியாயருக்கு நேரில் நீட்டினான். இதைக் கவனித்த வாத்தியாருக்கு கோபம் கட்டுமீறி வந்துவிட்டது. அதற்குமேல் அவரால் தாங்க முடியவில்லை. எனடா! இதென்ன மாலையடா! குலநாசகா! சண்டாளா! இவைகளை எங்கிருந்து எவ்விதமடா எடுத்து வந்தாய்?" என்று கேட்டபடியே வாயினால் சேவையும் கையினால் சாத்து முறையும் தடார் புடார் என்று செய்கின்றார்.

அடிபட்டுக்கொண்டே சிதம்பரம் "சுவாமி! யான் அப்போதே கேட்டுக்கொள்ளவில்லையா! தாங்கள் சொல்லியபடி தானே செய்தேன். ஜலத்திலுள்ள புஷ்பத்தை மாலை கட்டிக் கொண்டுவா என்று தாங்கள் சொல்லவில்லையா? ஜல புஷ்பம் என்றால் மச்சம்=மீன்கள் என்று யான் எங்கள் ஊரில் கேள்விப் பட்டதுண்டு. அதையே தாங்களும் தெரிவித்ததால் யான் நேரே ஏரிக்குச் சென்று செம்படவனைப் பிடித்து இந்த ஜல புஷ்பங்களைப் பிடித்துத் தரும்படியாகச் செய்து அதற்காக அவனுக்கு எனது வேஷ்டியை எடுத்துக் கொடுத்து இதை அவனையே கயிற்றில் மாலையாகக் கட்டித் தரும்படிச் செய்து யான் சுத்தமாக முழுகி விட்டு வாங்கிக்கொண்டு வருவதற்கு நேரமாய்விட்டது" என்றான்.

இந்த வயிற்றெரிச்சலானதும் கண்றாவியானதுமான வரலாற்றைக் கேட்ட உபாத்தியாயர் என்னதான் செய்வார் பாபம். ஓர் கல்லை எத்தனை நேரம் அடித்தாலும் திட்டினாலும் அதற்கு [illegible]க்குமா! அதே போல இந்த சிதம்பரத்தை என்ன செய்துதான்

பயன் யாது? அவனைத்தான் ஏற்றுக்கொண்டதே பெருந் தொந்தரவாய் முடிந்துவிட்டதே! இந்த மதியற்ற மண்டுவினிடம் நான் எவ்விதந்தான் காலங் கடக்க முடியும்?" என்று மிக்க வருத்தத்தை யடைந்து அவனை தன்னுலானவரையில் திட்டி நைய்யப் புடைத்து "தூணோடு தூணாக இறுக்கிக் கட்டி அன்று பட்டினி போட்டு விட்டால் சற்று தேறுவான்" என்று எண்ணி அவ்விதமே செய்து விட்டார்.

பின்னர் தன்னுடைய வீட்டின் பின்புறமுள்ள தோட்டத்திலிருந்து புஷ்பம் கொணர்ந்து பூஜையை முடித்துக்கொண்டு வந்தார். தூணில் கட்டப்பட்ட சிதம்பரம் கோவெனக் கதறி யழுவதைக் கண்டதும் முன்னிருந்த கோபம் மாறி அவன்மீது இரக்கமே உண்டாகிவிட்டது. "ஐயோ, பாவம்! ஏதோ அறியாமையினுலும் மந்த மதியினுலும் செய்துவிட்ட காரியத்திற்காக அவனைப் பசியுடன் நிறுத்திவிட்டு நாம் மட்டும் புசிப்பதென்பது நீதி யாகாது. இனி யவ்விதம் செய்யாதிருக்கும் முறையில் நாமவனைப் பழக்க வேண்டும்." என்று எண்ணியவராய் அவனருகில் வந்து "அடேய் சிதம்பரம்! ஏதோ போனுல் போகிறதென்றும் சிறிய பையனுகிய நீ அறிவீனத்தினுல் செய்து விட்டாயென்றும் நான் பொறுத்து உன்னை இந்த முறை விட்டு விடுகிறேன். இனிமேல் இவ்விதம் செய்தால் உன்னை யான் என்னிடத்திலிருந்து நீக்கிவிடுவேன் தெரிந்ததா!" என்ருர்.

சிதம்பரம் புலம்பிக்கொண்டே, "ஆகா தெரிந்தது. இனி சுவாமியையே ஒவ்வொன்றும் கேட்டுக்கொண்டு செய்கிறேன். என்ருன். பின்னர் உடனே உபாத்தியாயர் கம்பத்திலிருந்து அவனை அவிழ்த்துவிட்டு அவன்பால் மிகுந்த பச்சாத்தாபத்தை யடைந்து அவனுக்கு முதலில் அன்ன மளித்துப் பின் தான் உண்டெழுந்தார்.

அன்று பாடசாலை விடுமுறை நாளாகையால் உபாத்தியாயர் சற்று அயர்ந்து நித்திரை செய்துவிட்டு எழுந்தார். அதற்குள் மாலை மூன்று மணியாகிவிட்டது. அவருக்கு ஓர் முக்கிய காரியமாக வெளியில் சென்று வரவேண்டி யிருந்ததால் அவர் சிதம்பரத்

நோக்கி" அடேய் சிதம்பரம்! நான் வெளியில் சென்று வருகிறேன்; நீ வீட்டில் ஜாக்ரதையாக இரு. என்னைத் தேடிக்கொண்டு யாரேனும் வந்தால் அவர்களை இருக்கச் சொல்லி, இதோ வந்து விடுவார் என்றும் கூறு. நான் சீக்கிரமே வந்துவிடுகிறேன்" என்று கூறினர்.

இதுகேட்ட சிதம்பரம் "ச்வாமி! அப்படியே செய்கிறேன்; யார் வந்தாலும் இருக்கச் சொல்லவேண்டுமோ!" என்றான். இதுகேட்ட உபாத்தியாயர் "ஆமடா! யார் வந்தாலும் இருக்கச்சொல்லு. நான் சென்று வருகிறேன்" என்று கூறிவிட்டு வெளியே சென்று விட்டார். அவர் சென்ற சிறிது நேரத்திற்கெல்லாம் ஓர் நாய் திடீரென்று உள்ளே நுழைந்து 'லொள்ளு, லொள்ளு' என்று குரைத்தது. இதுகண்ட சிதம்பரம் "ஓகோ கோ! இவர் நமது உபாத்தியாயரைத் தேடிக்கொண்டு வந்திருக்கிறார் போலிருக்கிறது. இவர் நாயாக விருப்பினும் உபாத்தியாயரிடம் குரைக்கும் வழியைக் கற்றுக்கொள்ள வந்திருக்கிறாரோ! அல்லது குரைக்கக் கற்றுக் கொண்டவர்தானே தெரியவில்லை. சரி எதுவாயின் நமக்கென்ன! நாம் இவரை இந்த அறையில் விட்டு கதவைச் சாற்றி வைப்போம்." என்று எண்ணி உபாத்தியாயரின் படுக்கை யறையில் நாயை விட்டுக் கதவைச் சாற்றித் தாளிட்டு விட்டான்.

பின்னர் சிறிது நேரங் கழித்து ஓர் மனிதர் உபாத்தியாயரைத் தேடிக்கொண்டு வந்தார். அவரையும் வெகு மரியாதையுடன் அழைத்து ஆசன மளித்து உட்காரச் செய்து 'இதோ என் குரு வந்துவிடுவார்; இருங்கள்.' என்று கூறினன். பின்னர் சற்று நேரங் கழித்து உபாத்தியாயர் வந்தார். அவரைக் கண்டு வணங்கிய சிதம்பரம் தாங்கள் சென்ற பின்னர் இருவரே வந்தார்கள்; அவர்களை இதோ இருக்கச் செய்திருக்கிறேன்." என்று கூறிய வண்ணம் குருவுடன் உள்ளே சென்றான். உள்ளே அடைத்து வைத்திருந்த நாய் வள்ளு வள்ளு என்று குரைத்துக்கொண்டே இருந்தது. உள்ளே சென்ற உபாத்தியாயர் தன் சயன அறைக்குள் ஏதோ அலுவலாகச்செல்லக் கதவைத்திறந்தவுடன் உள்ளே அடைத் ... நாய் வெகு கோபத்துடன் குரைத்துக்கொண்டே உபாத்தி

யாயரின்மீது பாய்ந்தது. உடனே உபாத்தியாயர் "ஐயோ! அப்பா!" என்று உளறியபடியே எட்டுகுண்டாங்கரணமிட்டவண்ணமாக உருட்டியடித்துக்கொண்டு கீழே விழுந்தார்.

இதைக்கண்ட சிதம்பரம் பயந்து நடுநடுங்கிப்போய் எதிரிலிருந்த திண்ணைமீது ஏறி நின்றுகொண்டு "உபாத்தியாயரே! எழுந்திரும்; எழுந்திரும். அவர் போய்விட்டார்" என்றான். இதைக் கேட்ட உபாத்தியாயருக்கு கோபம் உச்ச நிலையை அடைந்துவிட்டது. மெல்ல எழுந்து சிதம்பரத்தைத்திட்டி நையப்புடைத்து "மூடாத்மாவே! நாயும் மனிதனும்கூட உனக்கு வித்தியாஸம் தெரியாதுபோய்விட்டதா? இனிமேல் இவ்விதம் செய்தால் சூட்டுக்கோல் தயாராகவிருக்கும், ஜாக்கிரதை "என்று கூறியவாறு வந்த மனிதரிடம் சென்றார். அவரைப் பார்க்கையில் உபாத்தியாயர் திடுக்கிட்டார். ஏனெனில் அந்த மனிதருக்கு உபாத்தியாயர் 100 ரூபாய் பணம் கடன் கொடுக்க வேண்டியிருந்தது; அதைக் கேட்கவே அவர் வந்திருப்பதால் அவர் திடுக்கிட்டார். "பாவி சிதம்பரத்தை எவரையும் இங்கு விடவேண்டாமென்று கூறுது சென்றுவிட்டதன் பயனாகவல்லவா இது முடிந்தது! என்ன செய்யலாம்? இந்த மனிதன் கடனைக் கேட்கவல்லவோ வந்திருக்கிறான்!" என்று வருந்தியவாறு அந்த மனிதனைக் கண்டு விசாரித்து உபசரித்தார்.

வந்த மனிதனும் வெகு கோபத்துடன் "என்ன ஐயா! இது தான் உமது ஒழுங்கோ! பணத்திற்கு வழியைச் சொல்லும் ஐயா! என்று கேட்டாலும் "இன்று, நாளை நாளை" என்று கூறுகின்றீர்கள். இனி நான் பணத்தைக் கொடுத்தாலன்றி உம்மை விடமாட்டேன்" என்று கண்டிப்பாயும் உறுதியும் கூறினான்.

இதுகேட்ட உபாத்தியாயர் மெல்லிய குரலாலும் நிரம்பவும் வணக்கமாயும் பேசத் தொடங்கி "ஐயா! நான் உம்மை மோசம் செய்து ஏமாற்றவேண்டுமென்ற எண்ணம் எனக்கில்லை. தற்போது எனக்கு மிகுந்த கஷ்டகாலமாக விருப்பதால் பணம் கொடுக்க சற்று தவக்கமாகின்றது. இன்னும் ஒரு மாதத்திற்குள் எவ்விதமேனும்

கொடுத்துவிடுகிறேன். தயவு செய்து பொறுத்துக்கொள்ள வேண்டும். என்னுடைய நிலைமையை நினைத்தால் கல்லும் கரையும். தாங்களும் என்போன்ற சம்சாரியாகையால் சம்சாரத்தின் வறுமைப் பிணியை நீரும் அறிந் தனுபவித்திருக்கலாம். ஒரே மாத தவணை தான் கேட்டுக்கொள்கிறேன்; மனமிரங்கவேண்டும்" என்று பரிதாப கரமாகக் கூறியதைக் கேட்ட வந்த மனிதன் "இந்த தடவை வேண்டுமானல் சற்று பொறுப்பேன். இனிமேல் இவ்விதம் கூறினல் பணத்தை வாங்கும் வழியில் வாங்குவேன். ஜாக்ரதை" என்று கூறிவிட்டுச் சென்றுவிட்டான்.

பிறகு உபாத்தியாயர் சிதம்பரத்தை யழைத்து, "அடேய் மடப் பயலே! உன்னைக் கட்டிக் கொண்டு மாரடிக்க என்னலாகவே இல்லை. எனக்கு உன்னல் ப்ராணன் போய்விடும் போல விருக்கிறது. நாயை இழுத்து படுக்கை யறையில் வைத்த உன் புத்தியை என்ன வென்று கூறுவது? என் காலை எவ்விதம் பிராண்டியது பார்" என்று கூறிக்கொண்டே சிதம்பரத்தை மீண்டும் திட்டினர்.

சிதம்பரம்:—(புலம்பிக்கொண்டே) குரு சுவாமிகாள்! பிராணன் போவதென்றால் இறந்துபோவதென்று தானே அர்த்தம். ஐயோ! ஐயோ! வேண்டாம். இறந்துபோகவேண்டாம். தாங்கள் உபாத்தியாயராயிற்றே; தங்களிடம் இந்த நாய்கூட குரைக்கப் பழகியவரோ என்னவோ என்று யோசித்து உள்ளே விட்டு விட்டேன். இனிமேல் விடுவதில்லை. மன்னிக்கவேண்டும்" என்று கூறி நமஸ்கரித்து எழுந்தான்.

பின்னர், உபாத்தியாயர் வெகு பிரயாசைப் பட்டு சிதம்பரத் துக்கு மெய்யெழுத்து, உயிர் மெய்யெழுத்துக்கள் முழுவதையும் கற்றுக் கொடுத்தார். சிதம்பரத்தினல் எவ்வளவு வேலை செய்யக் கூடுமோ அவ்வளவையும் அவனைக் கொண்டே செய்வித்து அவனை வேலையிலும் பழக்கி விட்டார். பிறகு சமையல் வேலையையும் சிதம்பரத்தைக் கொண்டே நடத்தத் தொடங்கிவிட்டார். பிரஸவிக்கச் சென்றிருந்த உபாத்தியாயரின் மனைவிக்கு ஓர் பெண் குழந்தை பிறந்தது என்கிற செய்தி வந்தது. உபாத்தியாய

ருக்கு இதுவே முதல் பெண் குழந்தையாகையால் அவர் மிக்க சந்தோஷங் கொண்டார்.

பின்னர் சில மாதத்தில் குழந்தையுடன் குரு பத்தினி வந்து விட்டார்கள். சிதம்பரத்தை முதலாவது வகுப்பு பாடத்தைப் படிக்கும் படியான நிலைமைக்கு அவனுடைய குரு கொண்டு வந்தார். சிதம்பரம் தான் பாடசாலையில் வந்த காலத்தில் மற்றைய பிள்ளைகள் "அரியை மறவேல்." என்று பாடத்தைப் படிக்கும் போது தானும் அவ்விதம் படிக்கும் நாள் என்று வரும் என்று எதிர்பார்த்திருந்தபடியே அவன் முதல் வகுப்பில் சேர்ந்ததும் குருவினால்,

அரியை மறவேல்.
ஆற்றலைக்;கைவிடேல்.
இறுமாப்பிற்கிடங் கோடேல்
ஈனரோ டிணங்கேல்
உத்தமனோடுறவுகோள்
ஊர் திரிந் துண்ணேல்
எடுத்ததோழில் முடி
ஏமாறி இழிவுறேல்
ஐயனடிபணி
ஒழுக்கத்தைக்கைவிடேல்
ஓயாமல் ஓது
ஔவைநூல் ஓதிவாழ்

என்று கற்பிக்கப்பட்டதை வெகு குதூகலத்துடன் கற்றுவந்தான். இனிமேல் தான் சீக்கிரம் கலைகளைக் கற்று கனத்த பண்டிதனாகி விடலாம் என்ற சந்தோஷத்தினால் பாடத்தை அக்கரை யுடன் படிக்கலானான். சிதம்பரத்தின் மவுட்டீகத் தனத்தை அறிந்த மற்ற பிள்ளைகளெல்லாம் அவனை ஏளனம் செய்வதுடன் தங்கள் புத்தகங்களையும், இடை வேளை போஜனம் கொணர்ந்த பாத்திரங்களையும் சிதம்பரத்தின் தலைமீது வைத்து தமது வீட்டுக்குத் தூக்கிக் கொண்டுவரச் சொல்வது வழக்கமாய்விட்டது. மூட சிதம்பரமும் அன்று உபாத்தியாயரிடம் ஒப்புவித்த மனிதர் "பள்ளிக் கூடத்துப் பிள்ளைகளே உனக்கு சகோதரர்கள்' என்று கூறியதை மறவாது மனத்தில் வைத்திருந்தானதலால் அவர்களுடன் சென்று மூட்டையை வைத்துவிட்டு வருவான். தங்களுடன் வந்த செய்தியை உபாத்தியாயரிடம் தெரிவிக்கலாகாதென்றும் அவ்விதம் தெரிவித்தால் உபாத்தியாயர் ஏன் தெரிவித்தாய் என்று குட்டுக்கோலால் நீட்டி விடுவார் என்றும் பயமுறுத்தி வைத்திருந்

படியால் அவன் அதைத் தெரிவிக்காமலேயே வெளியில் சென்று விளையாடி வருவதாகக் கூறி அடி வாங்கி யுண்டு வந்தான். இவ்விதமே சில மாதங்களாயின. இவன் வழக்கம் போல ஓர் பையனின் மூட்டையைத் தூக்கிக் கொண்டு அடுத்த ஊருக்குச் சென்றவன் வெகு நேரமாகியும் திரும்பி வராமையால் இவன் உண்மையில் சென்ற விடத்தை யறியாத குருவும் குரு பத்தினியும் வெகு கவலை யடைந்து "ஐயோ! பையன் இன்னும் வரவில்லையே என்ன செய்வது? எங்கு சென்றிருப்பான்? நன்றாக இருள் சூழ்ந்து விட்டதே?" என்று அபாரமான கலக்கத்தையும் பீதியை யும் அடைந்து அவனைத் தேடத் தொடங்கினார்கள்.

4—வது அதிகாரம்

"அம்மா! இவ்வித நரக வேதனையை என்னால் அனுபவிக் கக் கூடவில்லையே! நான் எவ்வளவு பொறுமையுடனும், நிரம்பவும் தாழ்மையாயும் நடந்துகொண்டு பேசினாலும் அண்ணியின் கடுஞ் சொல்லுக்கு அளவே இல்லாதிருக்கின்றதே! நான் என்னதான் செய்வேன்? அம்மா! தாங்களோ படுக்கையுடன் படுக்கையாக ஆகிவிட்டீர்கள். தங்களுடைய வேலையைக் கவனிக்கச் சற்று இங்கு வந்துவிட்டேன். அவ் வமயம் அடுப்பில் கொதித்துக் கொண்டிருந்த சாதம் பொங்கி கீழே வழிந்துவிட்டது. அதைக் கண்ட அண்ணி நரஸிம்மாவதாரம் கொண்டு என்னை இனி ஒன்று பாக்கியின்றி திட்டி, எனது பொறுமையினால் நான் வேண்டு மென்றே சாதத்தைக் கீழே கொட்டும்படிக்கு அஜாக்ரதையாக வைத்துவிட்டுச் சென்றேனென்று கூறி, அதை அண்ணனிடமும் தெரிவித்தாள். அதைக் கேட்ட அண்ணனும் திட்டியதுடன் "நீங்கள் தாயும் மகளும் உண்டு உருட்டுவது போதாதென்று கீழேயும் கொட்டி சோற்றைப் பாழாக்குவது உனது மண்டைக் கொழுப்பா, அல்லது அத்துணை பொறுமையா! இனி இவ்விதம்

செய்தால் தெரியும்; சனியனை வீட்டில் வைத்திருப்பதே தலை இறக்கமாக விருக்கிறது. அதைச் சகித்துக் கொண்டிருப்பதால் இவ்விதத் தண்டக் குடியாக்கி விடவும் செய்கிறீரோ!'' என்று கடுமையாயும் கட்டுக் கடங்காத கோபத்துடனும் கூறிச் சென்றார். “என் தாயே! என்னை யான் எவ்வளவு தேற்றினாலும் என் மனது அலைமோதுகின்றதே! கடவுள் என்னைப் பலவிதத்திலும் கெடுத்துப் பாழ்ப் படுத்தி விட்டாரே! இனி இக் கட்டை யிருந்து என்ன! இறந்து என்ன! என்னால் இக் கொடுமைகளைச் சகிக்கக் கூடவில்லையே'' என்று 20-22 வயது மதிக்கக்கூடிய ஒரு கட்டழகி தேகம் குலுங்கப் புலம்பிக்கொண்டே கூறினாள்.

அங்கு வெகு பலஹீனமாயும் நோய் கொண்டும் படுத்திருக்கும் கிழவி இதைக் கேட்டு மிகவும் வருந்தி கண்ணீர் விட்டவண்ணம் தனது புதல்வியைத் தடவியவாறு “ஆ! கல்யாணி! ஏன் கண் கலங்குகின்றாய்? அந்தப் பாழும் விதி யல்லவோ இவ்விதம் வைத்து வருத்துகின்றது. ஐயோ! உன்னை எத்தனையோ அருமையாக வளர்த்து உனக்கு வெகு மங்களகரமான பெயராகிய கல்யாணி என்று நாம மிட்டு அன்புடன் அழைத்து உயர்தரவிடத்தில் மன்மதன் போன்ற எழிலுடையவனுக்கு உன்னை மணஞ் செய்வித்து சிறிது மகிழ்ச்சி யடைவதற்குள் இவ்விதமான கஷ்டங்களுக்கு உன்னை ஈசன் ஆளாக்கி விட்டானே! ஐயோ! அவைகளை நினைக்கும் போதே என் வயிறும் குடலும் பற்றி எரிகின்றனவே! என்ன செய்வேன்? குழந்தையை நன்றாக வைத்துக்கொள்வார்களென்றல்லவோ அந்த விடத்தில் மலைத்துப் போய் உன்னைக் கொடுத்தேன்! மகா பாபிகளாகிய அவர்கள் கேவலமான இளந்தளிருடைய செடியை அடியோடு வெட்டுவதே போல வெட்டி உன்னைப் பாழாக்கி விட்டார்களே! உன்னுடைய நாத்தியும் மாமியும் நாசமாய்ப் போக! அவர்களே உனக்கு எமனாக வந்து முளைத்தார்களே! என் வயிற்றையும் உன் மனத்தையும் எரியச் செய்து உன்னுடைய வாழ் நாட்களை முற்றும் பாழ்ப் படுத்தி நீ யநுபவிக்க வேண்டிய எல்லாவற்றையும் மற்றொருத்திக்கு வஞ்சகமாக அளித்து நம் வயிறெரியச் செய்த சதியை

ஈசனுமா மறந்து விடுவான்? அவர்களை அடியோடு பொடி சூரணமாகவும் பாழ் நரகிற்குப் பங்குதாரர்களாகவும் அக் கடவுள் செய்யாமல் விடுவானு? "அரசன் அன்று கோல்வான்; தெய்வம் நின்று கோல்லும்" என்ற பழமொழி வீணுகுமா! இக் காலம் கலியல்லவா! மாசில்லாத மாரனுகவும் கோதில்லாத குணத்தை யுடையவனுமாகிய உன் புருடனேயே வேற்று மனத்தினனுக்கி அவன் முற்றிலும் நம்பும்படியான அபாண்டங்களை எல்லாம் உன் தலைமேதேற்றி, அவன் காணச் செய்து உன்னை விலக்கிவிட்டு மறு விவாகத்தை அவனுக்குச் செய்து வைத்து அல்ப மகிழ்ச்சியில் ஆனந்தப் பட்ட உன் மாமியினதும், நாத்தியினதுமான கதியை கடவுள் ஒருபோதும் மறக்க மாட்டார். சூக்ஷமமாக இப்போதே ஒரு சிறிது காட்டியும் விடவில்லையா? அதாவது,—உன் நாத்தியின் புருடனுக்கு வேலையில் தப்பிதம் செய்ததான குற்ற மேற்பட்டு ஒரு வருடம் கடின காவலுடன் அவன் வேலையிலிருந்தும் நீக்கப் படவில்லையா! அந்த ஒரு அவமானம் போதாதா! உம்; அத்தகைய அநியாயக்காரப் பாவிகளுக்கு இச் செய்கை தமது வஞ்சகத்தின் பலனுல் நேர்ந்த தென்கிற எண்ணமே உதிக்காது. மேன்மேலும் தீய தொழில் புரிவதிலேயே தான் நாட்டமாக விருப்பார்கள். அவைகளை நினைத்தால் என் வயிறு பற்றுகின்றது. மனம் கரைந்தோடுகின்றது. ஐயோ! உலகாளும் சக்கரவர்த்தினி போல நீ இருப்பாய் என்று எண்ணினேனே! நீ இவ்விதமான துன்பத்தை யனுபவித்து அம்பு பாய்வதே போலான வசைச் சொற்களால் வாட்ட மடைந்து பரிதபிக்கவோ உன் விதி யிருந்தது. உம் நீ முற்பவத்தில் செய்த வினையின் பயனிது. யாரை நொந்து ஆவதென்ன" என்று! அக் கிழவி மனம் நொந்து கண்ணீர் விட்டாள்.

கல்யாணி:—அம்மா! என்னை எத்தனையோ கொடுமைகளை எல்லாம் என் மாமி நாத்திகள் செய்து வருகையிலும், என்னைப் பற்றிக் கோள்கள் என் பர்த்தாவினிடத்தில் சொல்லிக் கொடுக்கையிலும் கூட என்னை என் பர்த்தா ஒரு வார்த்தை கூடச் சொல்லியவரல்லரே! கேவலமான படா பழியை என்மீது சுமத்தி என்னை வேம்பு போலச் செய்துவிட்ட பின்னரல்லவா அவர் மனம்

முறிந்தது. பின்னர் என் விதியும் இவ்வாறாய் விட்டது! ஐயோ! என் பர்த்தாவின் சகல போக பாக்யங்களையும் என்னுயிருள்ள போதே வேறொருத்தி கொள்ளை யிடப் பறி கொடுத்துவிட்டு அதைச் சகிக்க மாட்டாது படுந்துயரத்தை எண்ணி அழுவேனு? உதயமானது முதல் அஸ்தமிக்கும் வரையில் இவ் வீடாகிய புது நரகத்தில் விழுந்து தவிப்பதை எண்ணிக் கலங்குவேனு? ஐயோ! எனது தாங்க மாட்டாத அபாரமான சோகத்தினுல் உயிரேனும் போய்விடலாகாதா! நான் என்ன செய்வேன்!" என்று மிக்க வருத்தத்துடன் கூறிக்கொண்டிருக்கையில், அங்கு அவளுடைய அண்ணன் வெகு கோபத்துடன் பிரவேசித்து, படுத்திருக்கும் தாயை நோக்கி, "அம்மா! அப் போதிலிருந்து நீயும் உன் மகளும் பேசிக்கொண்டிருந்த சகல வார்த்தைகளையும் யானும் கேட்டுக் கொண்டுதானிருந்தேன். கல்யாணியை அவள் புருஷன் தள்ளி விட்டு மறு கலியாணம் செய்துகொண்டதும் அதற்குக் காரணங் கூறியதும் சுத்த வஞ்சகம் என்று எண்ணி யிருந்தேன். ஆனுல் இப்போது சில நாட்களாக அவைகள் முற்றும் உண்மையான காரணங்கள் தான் என்று எனக்கு திட்டமாகத் தெரிந்து விட்டது. இவள் வீட்டிலும் சரியான படி ஒத்துழைப்பதில்லை. சொல்லிய பேச்சைக் கேட்பதில்லை. தண்ணீர் மொண்டு வருவதற்காகச் சென்று விட்டால் அதோடு பொழுதே விடிந்து விடுகின்றது. ஏதேனும் சொல்வதற்குமுன் ஊரத்து சண்டை யிட்டு அண்டை அயலுக்குத் தெரிவிக்கும் தந்தியாகி விடுகிறுள். இவைகளெல்லாம் சற்றும் அழகாக வில்லை. இவளுடைய நடத்தையால் நம்முடைய குலத்திற்கே பெருத்த அவமானமும் ஆபத்தும் நேரும் போல விருக்கிறது. நமது குழந்தை ஸரஸ்வதிக்கு வயது ஆகிவிட்டது. அவளைக் கலியாணம் செய்துகொள்ள இந்த நாசகாலியால் எவரும் முன் வருவதற்குப் பின்னடைகின்றுர்கள். இவளுடைய நடத்தையால் இவளே பாழாகி விட்டது போதாதென்று இன்னு முள்ள குழந்தைகளையும் வாலறுபட்ட நரியின் கதையைப் போலச் செய்யப் பார்க்கிறுள் போலிருக்கின்றது. ஆகா! அந்த முத்து க்ருஷ்ண முதலியார் எத்தகைய குணவந்தர்! எப்பேர்ப் பட்ட கம்பீரத் தோற்றமும், காருண்ய சிந்தையும், கண்ணியமான மேம்

பட்ட போக்கு முடையவர்! அவரை பதியாக அடைந்தும் இவளுடைய தாதிஷ்ட வசத்தால் முற்றிலும் ஒத்து வாழ இவள் கொடுத்து வைக்கவில்லை. அத்தகைய மனிதனின் மனமும் குணமும் முறிந்து விடும்படியான நடத்தையை இவள் செய்த தினலன்றே அவர் இந்த காயை ஒதுக்கி வைத்துவிட்டுத் தன் மனதிற்கிசைந்த மங்கைநல்லாளை மணந்து தேனும் பாலும் போல வாழ்ந்து வருகிறார். ஆகா! அந்தப் பெண்ணின் பெயர் **நவநீதமாம்.** அவளுடைய அழகையும், குண விசேஷத்தையும், நடத்தையின் ஒழுங்கையும், அபாரமான பதிபக்தியையும் அவ்வூரார் கொண்டாடுவது மட்டு மிதமுண்டா! அதை இச் செவிகளே கேட்டு மகிழ்கின்றன. இப்போது அம்மனிதர் போலீஸ் இன்ஸ்பெக்டர் உத்தியோகத்தில் வெகு கீர்த்திமான் என்கிற பெயரைப் பெற்று அபாரமான சாமர்த்தியத்துடன் வேலை செய்து அனேக தங்க பதக்கங்கள் பரிசு பெற்று நிரம்பவும் புகழ் கொடியுடன் விளங்குகிறாராம். அத்தகைய போக பாக்கியத்தையுடைய மனிதனுக்குப் பத்தினியாக விருக்கக் கொடுத்து வைக்காத பெரும் அதிர்ஷ்ட ஹீனமாயிருக்கும் இவள் இனியாவது தன் விதியை எண்ணி நன்னடக்கையுடனிருக்கலாகாதா! இதோ இந்த கடிதத்தைப் படிக்கின்றேன்; கேட்டால் விளங்கும் உண்மை. யான் கூறியதன் தகவலும் தெரியவரும்" என்று கூறிக்கொண்டே தன் கையில் மடித்திருந்த ஓர் கடிதத்தைப் பிரித்து கீழ் வருமாறு படிக்கலானான்.

ம-ா-ா-ஸ்ரீ அம்பலவாண முதலியாருக்கு வந்தனங்கள். க்ஷேமம் க்ஷேமத்திற் கெழுதவும். தங்களுடைய கடிதமும் போட்டோவும் கிடைத்தன. பெண்ணைப் பற்றி ஒருவிதமான ஆக்ஷேபமும் கிடையாது. எல்லோருக்கும் மிகவும் திருப்தியாகவே இருக்கிறது. முக்கியமாக பையனுக்குப் பூர்ண சந்தோஷந்தான். பெண் அபாரமான அழகுள்ளவளென்பதற்குச் சந்தேகமே இல்லை. உங்களுடைய குணநிசயங்களைப் பற்றிக் கேட்கவே வேண்டாம். ஆனால் விசாரித்ததில் ஒரு விஷயத்தில் மட்டும் மனத்திற்குச் சிறிது கலக்கமாக விருக்கிறது. அது முக்கியமாக பெண்களுக்கு

அதிக ஆக்ஷேபனையாக விருக்கிறது. உண்மையான விவரத்தை யொருவரும் அறியார் என்பது திண்ணம். உலகமறிய உலாவி வரும் சொற்கள் தான் கடினமாயுள்ளன. அவற்றைக் கவனிப்பதும் சிறிது முக்கியமாகவே தோன்றுகின்றது. அதைத் தெரிவிப்பதனால் தாங்கள் வருத்தத்தை யடையக்கூடாது. அதாவது,—தங்களுடைய சகோதரியைப் பற்றித் தான் சிறிது ஆக்ஷேபம் உண்டாகி இருக்கின்றது. அந்தம்மாளின் நடத்தை சரியானதில்லை என்றும் அதனாலேயே அவர்களைத் தள்ளி வைத்து விட்டு அவர்களுடைய புருஷன் வேறு மணம் செய்துகொண்டிருக்கிறார் என்றும், அதோடு தற்போதும் அவ்விதமான துர் நடத்தையிலேயே இருப்பதாயும், அந்தம்மாளுக்கு ஓர் பெண் குழந்தையு மிருப்பதாயும் அக் குழந்தை பிறந்ததுவும் சந்தேகமாகவேஇருக்கிறதென்றும் எனக்குத்தெரிந்த முக்கியமான பல சீமான்களும் சீமாட்டிகளும் கூறக் கேட்டேன். இதைப்பற்றித் தான் வீட்டில் பெண் பிள்ளைகள் பலமாக ஆக்ஷேபிக்கின்றார்கள். உங்கள் தங்கையின் புருஷரான முத்துக்ருஷ்ண முதலியாரை எங்களுக் கெல்லாம் நன்றாகத் தெரியும். அவருடைய குணத்தைக் கூறுவதென்றால் அசாத்யமே. அத்தகைய மனிதரிடத்தில் இத்தகைய ஆபாசப் பெயர் எடுத்து விட்ட அந்தம்மாளைப்பற்றி இப்போது கேட்கவே வேண்டாம். சிலர் தற்போது கர்ப்பமாயிருப்பதாயும் கூறுகின்றார்கள். அந்த ஒரு காரணத்தை முன்னிட்டுத் தான் எங்களுக்குப் பெருத்த யோசனை யாக விருக்கிறது. இது விஷயமாக நாமிருவரும் நேரில் பேசிக் கொண்டால் மெத்த நலமாக விருக்குமென்று எண்ணுகிறேன். ஆகையால் தாங்கள் தயவு செய்து எங்கள் வீட்டுக்கு வரவேண்டு மாய்க் கோருகிறேன். வேணும் நமஸ்காரம்.

இங்ஙனம் தங்களன்பான,

ஆறுமுக முதலியார்.

இந்தக் கடிதத்தைப் படித்துகொண்டே வருகையில் கல்யாணியின் மனம் துடிக்கின்றது. கண்ணீர் தாரை தாரையாக வழிந்தோடு கின்றது. அவள் சகிக்க வியலாத பரம சங்கடத்தை படைந்து

"ஆ!" என்று பெரு மூச்சு விட்டுத் திணறுகின்றாள்." ஐயோ! இன்னுமா எனக்கு மறைவில் சத்துருக்கள் இருந்து என் மென்னியை அழுத்துகிறார்கள்! பாழும் ஜன்மம் யான் எதற்கு எடுத்தேனோ தெரியவில்லையே! ஆகா! என்ன அநியாயம்! என்ன அக்கிரமச் சொல்! நினைக்கும்போதே தேகம் நடுங்குகின்றதே! நான் பட்டதெல்லாம் போதாமல் தற்போது கர்ப்பமாயிருப்ப தாகவும் கூறி என்னை வருத்த வேண்டுமோ?" என்று பலவாறு எண்ணிப் புலம்பியபடியே, தனது அண்ணனை நோக்கி அவன் காலில் விழுந்து எழுந்து கோவெனக் கதறியவாறு "அண்ணா! என்னை ;இவ்விதமான சித்திர வதை செய்து, சிறுகச் சிறுகக் கொல்வதைவிட என்னை ஒரே வீசாக வீசி என் கவலையைத் தீர்த்து விடுங்கள். இவ் வீட்டில் யானிருப்பது உங்களுக்குச் சம்மத மில்லை யெனில் அதனைத் தெரிவித்து என்னை அப்புறப் படுத்திவிட்டால் நலமாக விருக்காதா! அதை விடுத்து அதற்காக இத்தனை வேலை செய்து யாரோ கடிதம் எழுதியது போல கேவலம் அபாண்ட சொற்களை வாய் கூசாது கூறி என்னை வதை செய்து வேடிக்கை பார்க்கவேண்டுமா! ஐயோ! எனக்கு தற்போது கர்ப்ப மென்ற பேச்சைக் கேட்கும்போதே என் வயிற்றில் காட்டுத் தீயைப் போல பற்றுகின்றதே! இந்த வார்த்தை தெய்வத்திற்கு அடுக்குமா! பொறுக்குமா! அவர் இதைச் சகிப்பாரா! இவ்விதம் கூறிய நாவிற்கும், வரைந்த கைக்கும் தகுந்த விதமான தண்டனையைச் செய்யாமல் ஊமையாகி வாயடைத்துக் கொண்டும், மொண்டியாகி கையைக் கட்டிக்கொண்டுமா அப்பாழுந்தெய்வம் உட்கார்ந்திருக்கும்? அண்ணா! குடியில் பிறந்த பெண்ணின் வயிறெரிந்தால் கோடியி லுள்ள சீலை நின்று எரிந்துவிடும் என்பது பழமொழி யல்லவா! அது வீணாகி விடுமா? என்னால் தங்கள் குடும்பத்திற்கே அவமானமும், கஷ்டமும், ஆபத்தும் நேரும்படியாக யான் பார்த்திருப்பதற்கு யானென்ன கல்லா, கடினமான இரும்பா! அண்ணா! அநியாயமாக என் மேல்,வீணாதும், சற்றும் அடாததுமான பழியைச் சுமத்திய துடன் அந்த விபரீத பழியின் மூலம் என்னை இக் கதிக்கு ஆளாக்கி அவந்தரையாக்கிவிட்டது போதாதென்று இன்னும் மிச்சமுள்ள வாணனையும் வருத்திவிட எண்ணித் தாங்களும் பங்கில் சேர்ந்து

கொண்டீர்களோ! என்னுடன் கூடப் பிறந்து, கூடப் பழகிய தாங்களே எனது மாசற்ற தன்மையை முற்று மறிந்தும் அறியாதவர்கள் போலாகி விட்டீர்களே! என்மீது கேவலம் கடும் பகையே பாராட்டி என்னை அடியோடு மடிய வைத்து பிடி சாம்பலாகச் செய்து விடவேண்டு மென்று எண்ணங் கொண்ட சத்துருக்கள் செய்த சதியாலோசனை ஓர் வியப்பாக தற்போது தோன்றவில்லையே! அண்ணா! என்னைக் கண்ணால் காண்பதற்கும் அண்ணியாருக்கு மனஞ் சகிக்கவில்லை. என் விதியின் பயனால் எனக்கு பஞ்சாமிருதமாக விருந்த எல்லோருடைய மனமும் நஞ்சாக மாறி என்னுயிருக்கு நமனாக வந்து மூண்டுவிட்டது. அண்ணிக்கு என்னைக் காண்பதற்கே பிடித்த மில்லாது போய் விட்டமையால் என்னால் செய்யப்படும் எல்லா வேலைகளும் அவர்களுக்கு மிகுந்த கோபத்தை யுண்டாக்கும் கருவிகளாக மாறுகின்றன. யான் எதைச் சொன்னாலும் அவைகளெல்லாம் பெருத்த குற்றமாகி விடுகின்றன, "தண்டத்திற்குப் பிண்ட மிட்டு வருவதற்குப் பலன் இவ்விதம் வாயும் மிஞ்சி விட்டதோ! தாயும் மகளும் வீட்டில் கால் வைத்த நாள் முதல் மூதேவி வாசமாக நிலைத்து விட்டாள். இந்த சனியன் தொலைந்து நான் நிம்மதியாக விருக்கும் நாள் என்று வருமோ?" என்று தினம் மும்முறை கூறித்திட்டாத நாள் கிடையாது. அண்ணா! தாங்கள் என்னைக் கவனித்து என் வார்த்தையைக் கேட்க வேண்டு மென்று யான் கூறவில்லை. தங்களின் தேவியாரின் இஷ்டப்படி நடக்க வேண்டுவதை யாரும் தடுக்கமாட்டார்கள். ஆயினும் கேவலமாக என்னை அநியாயமாய்த் திட்டுவதையும் படா பழி சுமத்துவதை மட்டுமேனும் சற்று நிறுத்துவீர்களென்று எண்ணினேன். அதுவும் என் வினையினால் இன்னு மதிகப் பட்டே போய்விட்டது. அண்ணா! உலகத்தில் ஒருயிரைக் காக்க (பெண்பாலாயின்) முதலில் தாய் தந்தையும், பின்னர் கணவனும், அதன்மேல் புத்திரரும், அதன்மேல் முக்கியமான சுற்றத்தவருமாக முற்படுவார்களாம். பொம்மைகளே கோபுரத்தைத் தாங்குவதாக நினைத்துக் கொள்வதே போல சில மனிதர்கள் தமக்குள் 'நாம் தான் எல்லோரையும் காப்பாற்றுகிறோம்; நம்மால் தான் உலகமே நடக்கின்றது' என்று எண்ணுகிறார்களே யன்றி

எல்லோருக்கும் மேல் ஒரு கடவுள் இருப்பதாகவும் அவன் நிய மனப்படியே மேற் குறித்த மனிதர்களின் பாதுகாப்பில் இருப்ப தாகவும் எண்ணுவதே கிடையாது. அண்ணு! என்னைப் பெற்றோர் களின் ஆதீனத்திலிருந்து கொண்டவரின் சுவாதீனமாகியும் என் விதி இவ்விடத்திலேயே வந்து இவ்விதமான அனுபவங்களை யனுபவிக்க வேண்டுமென்று மூண்டு விட்டது. தாங்கள் என்னைக் கைவிட்டு விட்டால் நம்மைப் படைத்த கடவுள் கூடவா என்னைக் கைவிட்டு விடுவார்? அவரும் கைவிட்டு விட்டால் பின்னர் உலக மேது? நீதி யேது! மற்ற எது தான் ஏது? ஒன்று மில்லையே! என் பர்த்தா என்னை விலக்கி விட்டார் என்கிற இளக்கரமான செய்கை யாலன்றோ எல்லோரும் என்னை இழிந்து பேச முற்பட்டு விட்டீர் கள்! அண்ணு! இனிமேல் என்னுடைய உயிர் நீங்கிவிடினும் சரி. என்னுல் தங்களுக்கு ஒருவிதமான பேச்சும் ஆபத்தும் அவமான மும் நேர வேண்டாம். யான் இப்போதே வெளியேறுகிறேன். எனக்கு நீங்கள் இதுபரியந்தம் செய்த உதவியாதெனில் எனக்கு ஜீவனும்சமாக என் பர்த்தா அளித்த நகைகளை முற்றும் ஸ்வீகரித் துக்கொண்டு எனக்கு முன்னிலுமதிகமான அழியாப் பழியை ஆயுள் பரியந்தம் சுமத்திவிட்டு என்னையும் எனது குழந்தையையும் வீணுகவும் அனுதையாகவும் நடுத் தெருவில் விட்டு விட்டீர்கள் பார்த்தீர்களா! அதொன்று தான் பெருத்த உபகார மாயிற்று. "மரம் வைத்த மகாதேவன் மழையையும் காட்டுவான்" ஆகையால் யான் எவ்விதமேனும் என் குழந்தையை உத்தேசித்து உலகத்தில் உயிர் வாழவேண்டும். ஆதலால் யான் இன்றே இப்போதே இவ்விடத்தைவிட்டுச் சென்று விடுகிறேன். என்னுல் ஒருவரும் வருத்தமோ ஆயாசமோ கொள்ள வேண்டாம். என் மூலமாக தங்களுடைய சம்மந்தத்திற்குப் பங்கம் நேரிடவேண்டாம். உங்கள் காரியங்களெல்லாம் குசாலாய் நடக்கட்டும். நான் என் விதியை எண்ணி விலகுகிறேன்" என்று தனது மனத் துயரம் தீர கண்ணீர் சோர, வயிற்றெரிச்சல் ஆற, கதறிக்கத்தியவாறு இடை யில் பேச விடாது கூறினுள்.

இவைகளை எல்லாம் கேட்டுக் கொண்டிருந்த அண்ணி எதிரில் வந்து பெரியதோர் இடி இடிப்பது போலத் தொண்டையைக் கனைத்துக்கொண்டே தனது புருடனை நோக்கி, "பேஷ்! வெகு அழகாயிருக்கிறது! நாடக மேடையின் மீது ஏறிய வேஷக் காரர்கள் அவரவர் வேஷத்திற்கு ஒப்பியவாறு நடித்தாக வேண்டுவது கடமை யல்லவா? அதே போல இந்த நீலி தன் ஜாலவித்தைகளை கோலமாகக் காட்டி, ஆலாபனம் செய்து அழுது,லீலாவினோதமாக நடிப்பதைத் தாங்களும் அகமறந்து கேட்டுக்கொண்டிருப்பது வெகு நன்றாக விருக்கின்றது. ஆட்டக்காரப் பயலுடன் வாட்டமாகப் பழகி நாட்டங்கள் கண்ட போட்டிக்காரி யல்லவோ இவள்! அதற்குத் தகுந்தாற்போல மாயாவித்தை செய்து ஓயாது புலம்பி நியாயவாதி போலப் பேசி தனது தீயச் செய்கையை மறைக்கப்பார்க்கும் வித்தையை நாமறியோம் என்ற திமிர்கொண்ட எண்ணம்போலும். இந்த அலங்கார வார்த்தையினல் கலங்கிவிடவேண்டாம். எழுந்து வாருங்கள். இதோ நீட்டி வைத்திருக்கும் கிழட்டுப்பிணத்தின் செய்கையால் இத்தனை விபரீதம் ஏற்பட்டுவிட்டது. "சாக்கடைப் புழுவிற்குப் போக்கிடமும் உண்டா?" என்பதேபோல இந்த கூத்தாடிச்சிக்கு ஏற்றவிடம் எந்தனைத்தைவாயன் கட்டிவைத்திருக்கிறுனே பார்ப்போம். உம். எழுந்திருங்கள். யாரோ உங்களைப் பார்க்கவேண்டுமென்று வந்திருக்கிருர்கள்; சம்மந்தி விட்டு மனிதர்கள்போலத் தோன்றுகின்றது. வாருங்கள்." என்று கூறிக்கொண்டே இருக்கையில் அம்பலவாணன் தன்பத்தினியாகிய காளிகாதேவியின் உக்ரமொழிக்குப்பயந்து அக் கோபத்தீயினுல் தகிக்கப்பட்டு ஏதும் வாய் திறந்து பதில் செப்பாது அவ்விடத்தைவிட்டு நகர்ந்தான்.

இங்கு நடந்த சகலமானவற்றையும் பார்த்துக்கொண்டிருந்த கல்யாணியின் தாயாராகிய சிங்காரம்மாள் அடைந்த துயரத்திற்கு ஓரெல்லை சொல்லக்கூடுமோ? பெற்ற வயிறு பற்றி எரிகின்றது. வீணன அபவாதமென்னும் தீயினுல் தன் மகள் வெந்து கருகுவதைக்காணச் சகியாமல் மனங்கலங்கி தான் இவைகளை எல்லாம் இன்னும் எத்தனைகாலம் கேட்டு அனுபவிக்கவேண்டுமோ!"

என்று கண்ணீர்விட்டு அனலிலிட்ட மெழுகுபோலத் துடிக்கின்றாள். கட்டுமீறி அபாரமாகப்பொங்கும் துயரத்தினால் அவள் மூர்ச்சையை யடைந்துவிட்டவள்போலானாள். தனக்கு இருகண்களைப்போல ஒரு பெண்ணையும்,ஓர் புத்திரனையும் ஈசன் அளித்திருந்தும் அக்கண்களால் சிறிதும் பிரயோஜனமின்றி குருட்டுக்கண்களுக்குச் சமானமாக ஆய்விட்டதே! ஐயோ! மகா கொடிய துஷ்டையாகிய மருமகளின் வயப்பட்டுழலும் மகனின் உதவியை இனி நாடுவதென்றால் அது எவ்விதமுள்ளதெனில்,—தீயினால் வெதும்பிப்போய்க்குத்துயிராகப் பரிதபிக்கும் ஒருவன் ஆகாயத்திலுள்ள குளிர்ந்த கிரணங்களையுடைய மதி சக்கிரவர்த்தியின் மடியில்கிடந்தால் அக்னியால் வெந்த தன்னுடைய தாபம் தீரும் என்று எண்ணி நன்றாக சூரிய வெப்பத்தால் காய்ந்துகிடக்கும் தரையில் இரவை எதிர்நோக்கி அமாவாசை காலத்தில் படுத்துப்புரளுபவனின் கதியைப்போலத்தான் முடியும் என்பதில் சற்றேனும் சந்தேகமுண்டோ? ஒருபோதுமில்லை. அநியாயமாக இவ்விதம் படாபழி கேட்பதன் வருத்தமேலீட்டால் இவள் தன்னுடைய குழந்தையையும் பாராது உயிரை மாய்த்துக்கொண்டால் அக்குழவியை வைத்துக்கொண்டு என்ன செய்வேன்? நமது உயிர் தத்தளித்துக்கொண்டிருக்கும் இன்னிலையில் பால்மணம் மாறாத இப்பாலகியை வைத்துக்கொண்டு காலத்தைப்போக்குவதெங்ஙனம்? சொந்த தங்கையையே இவ்விதம் வதைசெய்யும் இவன் இனி அக்குழந்தையைக் கவனிப்பானா? ஆகா! ஒருபோதும் கண்ணெடுத்தும் பாரான். இவைகளையெல்லாம் கவனிப்பின் நமது உயிர் இச்சடலத்தில் உள்ளபரியந்தம் கல்யாணியையும் குழந்தையையும் இவ்விடத்தைவிட்டு வெளியில் அழைத்துச் சென்று எவ்விதமான பாடுபட்டேனும் வளர்த்துவிடுவோம். பிறகு அவரவர் தலையிலெழுதியதுபோல நடக்கின்றது.'' என்று இவ்விதமெல்லாம் தீர்மானித்துக்கொண்டு புலம்பியபடியே சற்று மவுனமாகவிருந்தாள்.

இதற்குள் கல்யாணி சற்று தேறியவளாய் தன் தாயினருகில் சென்று, மூர்ச்சித்துவிட்டாளோவென்று கவனித்தாள். அதிகமாக மூர்ச்சையடையாது, சோகத்தால் புலம்பியதன் அதிர்ச்சியினால்

சிறிது களைத்துப்போயிருப்பது கண்டு குளிர்ந்த ஜலத்தைத் தெளித்து விசிறினுள். பின்னர் சிங்காரம்மாள் சிறிது தெளியப் பெற்றவளாய் கண்ணைத்திறந்து தன் பெண்ணின் முகத்தை நோக்கினுள். அவ்விதம் நோக்கியதால் அவளுடைய வருத்தமதிகரித்து "ஆ! கல்யாணி!" என்று கூறியவாறு கண்ணீர் ஒடவிட்டவண்ணம் "அம்மா! உன் குழந்தையையும் நோயாளியாகிய இப்பாவி என்னையும் கருதி நீ தற்கொலை செய்துகொள்ளாதே. தற்கொலை செய்வதைப்போன்ற பாவம் இவ்வுலகத்தில் மற்ற எதற்குமில்லை. பூர்வ ஜன்மாவில் செய்த பாவங்களை எல்லாம் இப்போது அனுபவிக்கின்றாய். மீண்டும் இப்பிறவியில் நாம் செய்வது பாதகமான க்ருத்யமென்பதை அறிந்திருந்தும் செய்வது தகாது. ஆகையால் ப்ராணத்தியாகம்மட்டும் செய்துக்கொள்ளாதே! உன்னைப்படைத்த கடவுள் எவ்விதமேனும் காப்பாற்ருது கைவிடமாட்டான். உனது புருஷனிடம் நீ எதிர் பார்த்த யாவும் பயனற்றதாகிவிட்டன. நேரில் சென்றதுவும் வினையாகிவிட்டது. ஆகையினுல் இனி ஒருவழியும் எதிர்பார்க்காது கடவுளை நம்பி நாம் இன்றே இவ்விட்டைவிட்டுக் கிளம்பி வேறு ஓர் முகமறியாத ஊருக்குச்சென்றுவிடலாம். என்னுயிர் உள்ளவரையில் உனக்குத்துணையாகவேனும் இருக்கிறேன். அதன்பின் உன்விதியின் வழியாகின்றது. உன்னை உன் பர்த்தா அனுப்பிய காலத்தில் உனது அணிகளைத்தாம் அடைவதற்காக உன்னைக்காப்பதாகக் கூறி சுமார்5000 ரூபாய் பெருமானமுள்ள சகல நகைகளை வாங்கிக்கொண்டதுடன் அவற்றைத் திருடன்கொண்டுபோய் விட்டதாக ஓர் புகாரையும் செய்து உன்னை அடியோடு மோசம் செய்வதற்கே இவ்விதம் செய்துவிட்டார்கள். இனி உனது உடுத்த சேலையை உதறித் தலைமீது போட்டுக்கொண்டு போவதைத்தவிர வேறு ஒன்றுமில்லை. இன்று இரவே புறப்பட்டுவிடுவோம். வீணுக வருந்திக்கண்ணீர்விடாதே!" என்று தேற்றினுள்.

தாய் மொழியை உட்கொண்ட கல்யாணி அன்று அவள் குழந்தைக்கும் அவ்வீட்டில் அன்னமும் ஊட்டவில்லை. தானும் தன் தாயும் சுத்த பட்டினி. ஏகாதசி அன்று இருக்குமாயின் புண்ணியமேனும் கிடைத்திருக்கலாம். அண்ணனுவது அண்ணியாவது அவர்களை

சாப்பிட்டாயா என்று ஒரு வார்த்தைகூடக் கேட்கவில்லை. அவ் வீட்டு வேலைக்காரியின் புருஷன் நெல்லுபிடித்து, அதை அரிசியாகச் செய்து, அரிசையை மூட்டையில் கட்டி, கட்டைவண்டியில் அடுக்கி வெளியூர்களுக்குக்கொண்டுபோய் விற்றுவருவது வழக்கம். அவன் அரிசியை அன்றிரவு ஏற்றிச்செல்லும் நாள் என்பதை கல்யாணி உணர்ந்தாள். ஆகையால் அவனை அழைத்து, "அப்பா! முருகா! இன்று செல்லும் உனது அரிசி வண்டியில் என்னையும், என் தாயாரையும், குழந்தையையும் தயவுசெய்து ஏற்றிக்கொண்டுபோய் நீ இறங்கும் ஊரில் விட்டுவிடுகிருயா? எனக்கு அவ்வுதவி செய்தாயானல் உனக்கு கடவுள் அதற்குத்தகுந்த கைம்மாறு செய்வார்". என்று வெகு துக்கத்துடன் நிரம்பவும் இறைஞ்சிய குரலால் கேட்டாள்.

இது கேட்ட முருகன் வியப்படைந்து வருந்தியவாறு "ஏனம்மா! எதற்காக இவ்விடம் விட்டுச்செல்கிறீர்கள்?" என்றான்.

கல்யாணி:—அப்பா! அவ்வூருக்கருகாமையில் சிறிய நாட்டுப் புறமொன்றுள்ளது. அதில் என் தாயாருக்குத்தங்கை யிருக்கிறார்கள். அந்தம்மாள் எங்களை வரும்படியாக எழுதியிருக்கிறார்கள். ஆதலால் நீ தகுந்த துணையாயும் வண்டியுடனும் செல்வதால் உன்னைக்கேட்டேன். நம்வீட்டுச்செய்தி முற்றுந்தான் உனது சம்சாரம் அம்மாக் கண்ணுக்குத் தெரியுமே! அவள் கூறியிருக்கமாட்டாளா! உம். ஒன்றை என் சொல்லவேண்டும்? கடவுளே நம்மை இளைக்கரமாக வைத்தபின்பு மனிதர் செய்வதற்குக் கேட்கவேண்டுமோ? எல்லாம் வினையின் பயன்தான்.

முருகன்:—ஆகா! எல்லா செய்தியும் எனக்குத் தெரியுமே! ஐயோ! பாவம். நல்ல குணமுடைய உங்களுக்கு இப்படிப் பட்ட காலம் வரவேகூடாது. என்ன செய்யலாம் விதி தான் காரணம். ஏனம்மா! நான் தங்களை அழைத்துச் சென்றால் ஐயா திட்டினால் என்ன செய்வது?

கல்யாணி:—அப்பா! முருகா! ஐயா உன்னை அப்போது வாழ்த்துவாரே யன்றி வசை கூறமாட்டார். தெரிந்ததா? நான்

இவ் வீட்டில் காலை வைத்தது முதல் அவர்களுக்கு என்னுல் பலவிதத்திலும் கஷ்டம், நஷ்டம் எல்லாம் உண்டாகியதுடன் பெருத்த அவமானமும், ஆபத்தும் சம்பவித்து விட்டனவாம். ஆகையால் யான் தொலைந்து விட்டால் அவர்களுக்குச் சர்க்கரைப் பந்தலில் தேன் மாரி பொழிந்தது போலாகும். ஆதலால் தயவு செய்து இன்று எங்களை ஏற்றிச் செல்லவேண்டும்'' என்று கெஞ்சிக் கேட்டாள். இவளுடைய பரிதாபகரமான வார்த்தையைக் கேட்டு மனமுருகிய முருகன் வருந்தியவாறு, "அம்மணீ! இன்று இரவு வண்டி புறப்படும்போது சொல்லி யனுப்புகிறேன்; தயாராக விருங்கள்'' என்று கூறிவிட்டுப் போய்விட்டான். இது கேட்ட கல்யாணி மெத்த மகிழ்ச்சியை அடைந்து,பெற்ற தாயிடம் சென்று, உற்ற செய்தியை உரைத்து, அவள் சித்தம் களியுறச் செய்து, அத்தனைத் தனது சுத்தமான உத்தம மனத்தினுல் வணங்கி தோத்திரஞ் செய்து, சித்தம் சிதறிப் பித்தங் கொண்டவள் போலத் தனது கடமையான வேலைகளைச் செய்து வந்தாள்.

கல்யாணி தன் காதில் அணிந்திருந்த சாதாரணமான கெம்பு தோட்டைக் கழற்றி, அதை அவ்வூரிலிருக்கும் ஓர் கடைக்கார னிடம் விற்று, அதனுல் பெற்ற பணத்தை மடியில் வைத்துக் கொண்டு, அன்று இரவை எதிர் நோக்கி நின்றிருந்தாள். இரவு சுமார் மணி 8க்கு மேலிருக்கும். முருகன் வண்டி புறப்படுவதைத் தெரிவித்தான். உடனே கல்யாணி தன் தாயினிடம் செய்தி யுரைத்து அவளை மெதுவாகத் தூக்கி, தான் தாங்கிக்கொண்டு நடத்தி யழைத்து வந்தாள். நடைத் திண்ணையில் உட்கார்ந் திருந்த தனது அண்ணனைக் கண்டு, தாயை ஒருபுறம் உட்கார வைத்துவிட்டு, அவன் காலில் விழுந்து கோ வெனக் கதறி யழுதவாறு "அண்ணு! என்னருமை அண்ணு! ஆசை அண்ணு! ஆருயிர் அண்ணு! இருவரையும் ஒரு குக்கியில் கடவுள் குடி புகுத்தி ஒரே மனையில் வளரச் செய்தார். ஓர் கலத்திலுண்டு, ஓர் நிலத்தில் ஓர் பாயில் படுத்து, ஒன்றுக விளையாடி, ஒன்றுகக் கலை யோதி, ஒன்றுகத் திரிந்து, ஒருயிராக விருந்த எனதண்ணு! தற்போதோ யான் தங்களுக்கு முற்றிலும் நஞ்சாக மாறி பஞ்சைப் போல பறக்

கும்படியாகி விட்டேன். எனதண்ணா! என்னால் தாங்கள் இதுபரியந்த மனுபவித்த கஷ்டங்களையும், அவமானங்களையும் உம்முடன் கூடப் பிறந்த ஒன்றை மட்டுமேனும் நோக்கி அவைகளை மறந்து அடியாளை மன்னிக்க வேண்டுகிறேன். அண்ணா! இந்த நிமிடம் முதல் என்னால் தங்களுக்கு ஏற்படக் கூடிய சகல துன்பங்களையும் விலக்கிக்கொண்டு பாபியாகிய அடியாள் செல்கிறேன். என்னைப் படைத்த கடவுள் ஒருபோதும் கைவிட மாட்டார் என்கிற ஓர் தைரியமே என்னைத் தூண்டுகின்றது. ஆதலால் நான் என் தாயை எனது துணைக்கு அழைத்துக்கொண்டு கண் மறையச் செல்கிறேன். தாங்களும், தமது மக்களும், பத்தினியாரும் இனியேனும் துன்பமும், அவமானமு மின்றி அமோகமான இன்பத்துடன் வாழுங்கள். நான் இறந்துவிட்டதாக எண்ணி தலை முழுகி விடுங்கள். அண்ணியாருக்கு எனது வந்தனத்தையும், மன்னிப்பையும் தெரிவியுங்கள். மகா பாபி யான் செல்கிறேன்" என்று கூறிக்கொண்டே எழுந்து மீண்டும் தன் தாயைத் தாங்கிக்கொண்டாள்.

சிங்காரம்மாளுக்கு தன் மகனின் முகத்தைக் கண்டு பேசவும் மனம் வரவில்லை. எனினும் அவளுடைய வயிற்றெரிச்சல் மித மிஞ்சி விட்டபடியால் தன்னையே மறந்தவளாய் "ஆ! கடவுளே! அநியாயமாகவும் அபாண்டமாகவும் ஓர் இளம் பாவையின்மீது படாப் பழிகளைச் சுமத்திப் பாழாக்கி விட்ட அந்த பஞ்சமாபாதகர்களை ஒரு கண் பார்க்காமல் நீயுமா விட்டு விடுவாய்? ஒரு குற்றமும் மனத்தினாலும் செய்தறியாத பேதைப் பெண்ணை அதோகதியாக நடுச் சந்தியில் அடிக்கச் செய்த படுபாவிகளைப் பொடியாக்கிவிட நின் கண் நோக்கினாலாகாதா! ஐயோ! இக் காலத்துப் பெண் பிள்ளைகளைப் போல கையில் நாலு காசேனும் வைத்துக் கொண்டேனா! என் மதியீனத்தினால் எல்லாவற்றையும் பறி கொடுத்துப் பாவியானேனே! இக்காலம் பணத்தின் மீதல்லவா பிறந்திருக்கிறது. பெற்ற தாயாயினும், பிறந்த பிறப்பாயினும், உற்ற துணைவராயினும், யாராயினும் சரி; கையில் பணமுள்ளவர்களானால் அவர்களையே லக்ஷியம் செய்து நெய்யுடன் உணவிட்டு வெகுவாய் உபசரித்துத் தோத்திரம் செய்கிறார்கள். தனமில்லாதவர்களானால்

அவர்களை அவமதித்துப் பேசி புறக்கணிப்பதுடன் அநியாயமான அபாண்டச் சொற்களுக்கும் உள்ளாக்கி விடுகின்றார்கள். பாழாய்ப் போன இக் கலிகாலத்து அலங்கோலம் இவ்விதமாகவா நிலை குலைந்து தலைகீழாக மாறிப் போகவேண்டும்? சேச்சே! இவ் வுலகி லுள்ள பலவிதமான அக்ரமங்களை யெல்லாம் கண்டு சகிக்கமாட் டாமல் கடவுளும் எந்த திக்கில் சென்று ஒளிந்துகொண்டாரோ! அதனால் தான் அநியாயக்காரப் பாவிகளுக்கு அடிமையான உலக மாய்விட்டது இது! தெய்வம் நீதிவான்களிடையிலும் உத்தமர்களி டையிலும் தான் துணை புரியும் என்று பெரியோர் கூறுவார்களே! இந்த விபரீத காலத்தில் அக்கிரமக்காரர்களைத் தாண்டிக்கொண்டு வந்து உத்தமர்களுக்கு உதவி புரிய கடவுளுக்கும் பயம் வந்துவிட் டதுபோலும். ஐயோ!'' உடன் பிறப்பில்லா உண்டி பாழ்'' என்ற மூதுரையும் பொய்த்து விட்டதே; உடன் பிறந்த பிறவி ஆணுனல் என்ன! பெண்ணுனல் என்ன! பாசம் என்னும் பிணைப்பு அவ்விரு உயிர்களிடத்திலும் ஒன்றுகவல்லவாயிருக்கும்? கூடப் பிறந்த பிறப்பென்னும் வாஞ்சையும் கூடவா இவ்விதம் வேம்பாக மாறி விடும்! அடாடா! அநியாயமே! "பெண்டாட்டி தெய்வமே பெருந் தெய்வம்'' என்றது போல அந்த உத்தம வாக்கு சித்தத்தில் பதிந்து மற்ற எல்லாவற்றையும் கொத்துடன் தள்ளிவிட்டு உன்னை துர்த்தனக ஆகிவிடச் செய்துவிட்டதே! அடேய் அம்பலவாணு! உன் கூடப் பிறந்த பிறப்பினுலா உனக்கு வந்துற்ற துன்பங்கள் யாவும் சம்பவித்தன? அவளை கண்ணீர் பெறுக, மனம் புண்ணுய்த் துடிக்க, எண்ணறியாத அபாண்டச் சொற்களை வாய் கூசாது பேசி அவளுடைய வயிறும் மார்பும் தத்தளிக்க,எண்ணங்கள் சிதறி ஏங்கித் தவிக்கும்படியான நிலைமையில் அவளைக் கொணர்ந்ததுடன் வீட்டையும் விட்டு நடுச் சந்தியில் குழந்தையும் தாயும் பரிதபிக்கும் படியாக அனுப்புவதான செய்கையினுல் நீ இனி வெகு சந்தோஷப் பட்டு சிந்தை பொங்கி வாழ்வாய்! அவளுடைய வயிற்றெரிச்சலும் கண்ணீரும் வீண் போகாது. அவைகளையும் நீ அறியாமற் போக மாட்டாய். அவளை நீங்கள் இவ்விதம் பண்ணிவிட்டதுபோதும். அந்தக் கண்ணனும் கூடக் கைவிட்டு விடமாட்டான். இனி நீங்கள் சுகமே வாழுங்கள். இவ்விதம் திண்டாட வைத்துக் கண்டு களிக்க

வேண்டுமென்று எண்ணித் தான் அவளுடைய 5000 ரூபாய் நகைகளையும் அபகரித்துக் கொண்டதுடன் அவை திருட்டுப் போய் விட்டன வென்று கூறி மறுபடி கேட்பதற்கு வழியின்றி சூன்யம்செய்து விட்டீர்கள். இவ்விதம் அவளை அதோகதியாக்கி விட்ட பலனை நீங்கள் அனுபவியாது போகமாட்டீர்கள். மரத்தின் காய் மரத்தடியில் தான் விழும். என் வயிறு இருவருக்கும் இடங் கொடுத்த தானாலும் உனது துர்ச் சகவாசச் செய்கையினால் எரிந்து இவ்விதம் கூறச் செய்கின்றது. இனிமேல் நாங்கள் தொலைந்தோம் என்று எண்ணி உங்களுடைய கொண்டாட்டத்தை பன் மடங்கு அதிகரித்த களியாட்டத்துடன் நடத்திச் சுகமே வாழுங்கள்." என்று பேசமாட்டாது மெல்ல தன் வயிற்றெரிச்சல் தீரக் கூறினாள்.

இதற்குள் அம்பலவாணனின் மனைவியாகிய காளிகாதேவி, இவைகளை மறைந்து கேட்டுக்கொண்டேயிருந்தவள்—திடீரென்று எதிரில் ப்ரஸன்னமாகி தன் கணவனை நோக்கி "என்? மதிமயங்கி விட்டதோ! தாயும் மகளும் சேர்ந்து நம்மை வைத்த சவரணைக்கு இன்னும் மந்திரம்ஓதி மதியைக் கலைத்துவிட வந்து விட்டார்களோ? இந்த வேஷங்களை எல்லாம் போட்டு சோக ரஸத்தை நடித்துக் கண்ணீர் விட்டால் தன் செய்கைகள் மறைந்து விடுமென்றும் பின்னால் தானே குதிரை யோட்டலாம் என்றும் எண்ணி வந்து விட்டார்கள் போலிருக்கிறது! இந்த பகல் வேஷங்கள் யாரிடத்தில்? வீட்டை விட்டு ஓடி விடுவதாக மிரட்டுவதால் நீங்களும் நடுங்கிவிட்டீர்களோ! வீட்டை விட்டுச் சனியன்கள் தொலையட்டுமே பார்க்கலாம். வீட்டை விட்டுத் தொலைந்தால் வாட்டமாக பிண்டத்தை கால் நீட்டிக்கொண்டு உண்பதற்கு எந்தக் கூட்டாளிப் பயல் வைத்துக் கொள்ள இவர்களுடைய பேட்டிக்கு எதிர் நோக்கியவாறு 'இன்னும் வரவில்லையே?' என்று வாட்டத்துடன் காத்திருக்கிறானோ தெரியவில்லை. அத்தகைய தைரியமில்லாமலா இச் சித்திராங்கி இத்தனை மாயங்கள் செய்து புறப்படுவாள். ஓடிப் போய்விட்டாள் என்ற பெயர் ஒன்று பாக்கியில் இருந்தது. அதையும் சம்பாதித்துக் கொள்ளவே இந்த யோசனை செய்துவிட்டார்கள் போல விருக்கிறது. இந்த பூச்சி மிரட்டு எதற்காக? கொழுத்துப் போய் வீட்டை விட்டுக் கிளம்பி

விட்டு நாம் துரத்திவிட்டதாகப் பழி யொன்று சுமத்திவிட்டுப் போகத் தான் இவ்விதம் செய்கிறார்கள். நன்றாக விருக்கின்றது. பெட்டைகளும் ஏதேதோ உளருகின்றன; அவற்றை எல்லாம் மொட்டைச்சி போலக் கேட்டுக்கொண்டே கண்ணைக் கொட்டாமல் உட்கார்ந்திருக்கிறீர்களே! இதுதான் உங்களுடைய ஆண்மைக் கழகோ? எந்த சனி எவ்விதம் தொலைந்தால் நமக்கென்ன ? எழுந்து வாருங்கள். வீட்டோடிருந்தால் வயிற்றுக்குக் கொட்டலாம். அதை விட்டுச் சென்றால் செல்லட்டும். இந்த ஜால வித்தைக்குப் பயந்து காலை நீட்டி உட்கார வேண்டாம்" என்று கூறியவாறு அவன் கரத்தைப் பற்றி இழுத்தாள்.

இதற்குள் கல்யாணி கலங்கிய வண்ணம் " அண்ணீ! தாங்கள் இதுபரியந்தம் உதவி செய்து உயர்தர பட்டங்களளித்துக் காப் பாற்றியது போதும். நான் வீட்டை விட்டுச் சென்றும் ஓடிவிட்ட தாக எனக்கு ஓர் புதிய பட்டத்தை அளிக்க வேண்டாம். என் னுடைய தாயாரின் துணையுடனும், சர்வேச்வரனின் துணையுடனும் ஊராறிய என் விதியை எண்ணிச் செல்வது ஓடிப் போவதாக மாட்டாது. எனது நிலைமையை மனிதர் அறியாவிடினும் அந்த மாயவன் முற்றிலும் அறிவான். என்னை ஆதியிலிருந்து இக் கதிக்கு ஆளாக்குவதற்கு மாபாபி சண்டாளிகளான என் மாமி நாத்தியின் பங்கில் நீங்களும் சேர்ந்திருந்த வைபவத்தை முற்று மறிந்தேன். இன்னமும் என்னால் தங்களுக்கு வருத்தம் வேண் டாம். நாங்கள் ஆகாயவாணி பூமிதேவியின் சாக்ஷியாகச் செல் கிறோம். அண்ணா! நமஸ்காரம்; செல்கிறேன்" என்று கூறிக் கொண்டே தனது தாயை மெல்ல நடத்திக் கொண்டு சென்று முருகன் தயாராக வைத்திருந்த வண்டியில் ஏற்றிவிட்டு, தன் குழந்தையையும் உட்காரச் செய்துத் தானும் உட்கார்ந்தாள். இங்கு நடந்த சகல வரலாற்றையும் கேட்டுக்கொண்டிருந்த முருகனும் வருந்தியவாறு வண்டியை விட்டான்.

அங்கு உட்கார்ந்திருந்த அம்பலவாணனுக்கு எதுவுமே பேச முடியவில்லை; எனினும் தன் தங்கை கண்ணீர் பெருக மனமுருகிக் கூறிவிட்டுச் சென்ற காட்சியினால், எத்தனை கல் மனத்தினனாக

விரும்பினும், அவனுடைய மனம் அப்போது சற்று இளகியே விட்டது. அவனை யறியாது மனத்தில் ஏதோ செய்துக் கண்ணில் நீர் வழியத் தொடங்கிவிட்டது. ஐயோ! பரதேசி போலச் செல்லும் தன் தங்கையை மீண்டும் அழைத்துக்கொண்டு வந்துவிடலாமா! என்ற எண்ணமும் உதிக்கத் தொடங்கியது. "அவள்மீது கூறப் பட்டுள்ள சகலமான அபாண்டங்களும் அவள் கூறிய மாதிரி யிலிருந்து வீணானவை யென்று விளங்குகின்றதே! ஆகா! என்ன செய்வது?" என்று யோசித்துக்கொண்டு உட்கார்ந்திருப்பதைக் கண்ட அம்மாள் நாகம் போலச் சீறி விழுந்தவாறு "ஏதேது! தங்கை யைப் படைத்துள்ள அழகிற்கு அழுகையும் வருகின்றதோ! இன் னும் உலகத்தவர்களைப் போல உத்தமியாயும் கணவனுல் வைத்துப் படைக்கப் பட்டவளுமாகிய தங்கையைப் படைத்திருந்தால் நீங்கள் வௌவாலாகத் தான் பறப்பீர்கள். அம்மாடீ! வீட்டில் சுற்றிக் கொண்டிருந்த மூதேவி தொலைந்தது: இனி வீடு க்ஷேமப் படும். அவமானச் சொல் நீங்கி ஆகந்தச் சொல் பிறக்கும் காலமும் நேருமா என்று ஏங்கியிருந்த எனக்கு இன்னுள் கிடைத்ததை யோர் நன்னு ளாக வல்லவா கொண்டாட வேண்டும்? ஏதோ யுகம் புரண்டுவிட் டது போல உட்கார்ந்து முண்டைச்சி போலப் புலம்ப ஆரம்பித்து விட்டீர்களே! பேஷ்! வெகு அழகு உம் உள்ளே வாருங்கள்!" என்று விரட்டி அதட்டியவாறு கூறினுள்.

இவைகளை எல்லாம் கேட்ட அம்பலவாணனுக்கு ஒன்றும் தோன்றவில்லை. தன்னை எவ்வளவு தான் தூப தீப மிட்டு மனத்தை மாற்றி கேவலமாக்கித் தன் தாயுடனும் சோதரி யுடனும் விரோதியாகச் செய்துவிட்ட போதிலும் அவர்கள் எதிரில் இருக்கையில் மனம் அவ்வளவாக பாதிக்கப் படாமல் தனது மனைவியின் சொல்லில் மயங்கிக் கிடந்தது; அவர்கள் வெளியில் செல்லும் காலத்தில் கூறிய உரைகளாலும் அவர்கள் செல்லும் பரிதாபத்திலும் இவனுடைய மனது முற்றிலும் கலங்கியே போய்விட்டது. "ஐயோ! நாம் என்ன இத்தகைய கொடிய மனித ஞக மாறிவிட்டோமே!" என்ற எண்ணம் அவன் மனத்தைக் கப்பிக் கொண்டது. "ஐயோ! நம்முடன் கூடப் பிறந்த உயிராகிய

தங்கையையே நாம் இவ்விதம் விட்டுவிடலாகுமா! சண்டையும் கூச்சலும் வீட்டில் எவ்வளவிருந்த போதிலும் நாம் அதை அடக்கி வெளிவிடாது பார்த்துக்கொள்ள வேண்டாமா? அடாடா! நம்மைப் பத்து மாதம் சுமந்து படாத பாடு பட்டு பெற்ற தாயாரை—நம்மால் கோடானு கோடி துன்பங்களை யனுபவித்து வளர்த்த தாயாரை—இவ்விதம் சிக்குடனிருக்கும் நிலைமையில் நாம் கை விட்டு விட்டோமே! இது கடவுளுக்குத் தான் சம்மதியாகுமா! சிச்சீ! நாம் உடனே சென்று அழைத்துக் கொண்டு வந்துவிடுவோம். இப் பெண் மதியைக் கேட்டா நாம் நம்மதியை இழந்துவிடுவது?" என்று தனக்குள் பலவாருக எண்ணிய வண்ணம் திடீரென்று எழுந்தான்.

இவனுடைய சித்தம் சிதறி இருக்கின்றது. பாசக் கயிற்றில் இவனது மனம் கட்டுண்டு விடும் போலவிருக்கிறது என்றதை யறிந்த அம்மாள் தன் கணவனின் இரு ;கரங்களேயும் கெட்டியாகப் பிடித்துக்கொண்டு "எங்கே வெகு துரிதமாகக் கிளம்புகிறீர்கள்? நேரமாகிறது. படுத்துறங்கவேண்டாமா! உம் என்ன யோசனை?" என்றாள்.

அம்பல:—(சற்று வருத்தம் மேலிட்ட கோபத்துடன் பேசத் தொடங்கி) அடீ! செல்லீ! உன்னுடைய வார்த்தைக்கு என்னை எவ்வளவு அடிமையாக்கிவிட்ட போதிலும் நான் குடியிருந்த வீட்டில் பங்குகொண்டு வந்த உயிரையும், வீட்டையும் கைவிட என் மனம் சம்மதிக்கவில்லை. எனது மனம் என்னை ஏதோ கரம் வைத்துக் கூறுவதே போலவிருக்கிறது. ஆகையால் நான் என் தாயாரையும் தங்கையையும் திரும்ப அழைத்து வருகிறேன். என்னைத் தடுக்காதே! நான் சென்று அழைத்துத் தான் வருவேன்" என்று அவன் கூறும் நாராசம் போன்ற வார்த்தைகளைக் கேட்டதும் அந்தம்மாளின் ஆத்திரம் உச்ச நிலையை அடைந்து விட்டது. கண்கள் நெருப்புத் தணல் கிளம்ப "என்ன சொன்னீர்கள்? ஓகோ! தாயையும் சேயையும் அழைத்துக் கொண்டு வருகிறீர்களா! ஏன்! இது பரியந்தம் வந்த புகழ் போதாதென்றும் இன்னும் புகழ் பெருக பொற்கொடியாள் தங்

கையைப் புதுப்பிக்க அழைத்து வருகிறீர்களா! முதலில் என்னை ஒரு வழி செய்து விடுங்கள்; அவர்களுடன் கூட இனி ஒரு விநாடி கூட என்னாலிருக்க முடியாது; சனியன்கள் வீட்டை விட்டுத் தொலைந்த வளவில் இன்னும் எதிர் கொண்டழைத்து விருந்து செய்யவேண்டுமா! உங்கள் இஷ்டப்படி என்ன வேண்டுமானாலும் செய்துக் கொள்ளுங்கள். யான் இதோ இப்போதே தற்கொலை செய்துக் கொள்கிறேன்'' என்று வாயிலும் வயிற்றிலும் அறைந்து கொண்டு ஆகாத்தியம் செய்தாள்.

இந்த ராக்ஷஸத்தனத்தைக் கண்டு பயந்து விட்ட அம்பலவாணனுக்கு பழைய நினைவுகள் சில நினைவிற்கு வந்து விட்டன. அதாவது தான் முன்னர் ஏதோ ஓர் விஷயத்தில் மறுத்துப்பேசியதற்கு மண்ணெண்ணெயை மேலே ஊற்றித் தீ வைத்துக் கொண்டு அந்த பழியை தன் மேலேயே சுமத்திவிடுவதாகக் கூறி எண்ணையை எடுத்து ஊற்றிக் கொண்ட நீலித்தனச் செய்கை இவனுக்கு நினைவிற்கு வந்து விட்டது. ஆகா! அற்பமாகிய அந்த காரியத்திற்கே அவ்விதம் செய்த இந்த ராக்ஷஸி இந்த காரியம் நாம் செய்தால் நம்மை வீணான அபவாதத்திற்கு ஆளாக்கி விடுவதுடன் கொலை பாதகனென்று கூண்டிலுமடைத்து விடச் செய்வாளே! ஐயோ! இக் கொடிய ஆபத்தில் அகப்பட்டுக் கொண்ட நாம் என்ன செய்வோம்?'' என்று சற்று தயங்கினான். மீண்டும் துணிந்து செல்லலாகுமா! என்றும் எண்ணுகிறான். அவன் இயற்கையிலேயே மிக்க பயந்த சுபாவமுடையவனாகவும் நிரம்பவும் மானியாவும் உள்ளவனாகையால் தான் துணிந்து சென்று அழைத்து வந்து விட்டால் பின்னும் என்னென்ன ஆபத்துக்கள் நடக்குமோ! தானே தற்கொலை செய்துக் கொண்டு தன் மீதோ, தனது தங்கை தாயார் மீதோ கொலை செய்த குற்றத்தைச் சாட்டி அவதிக்கு ஆளாக்கி விட்டால் என்னசெய்வது?'' என்று எண்ணி தன்னுடைய எண்ணத்தை மாற்றிக்கொண்டு மறுபேச்சின்றி மவுனமாகவே தனது சயன அறையை அடைந்து படுத்துக் கொண்டான்.

அவனுடைய உண்மையான மனவேறுபாட்டையும் பாசக் கயிற்றில் ஊசலாடுவதையும் கண்ட செல்லியம்மாள் அப்பொழுதே அவ

னிடம் அதிகமாகப் பேசினல் என்ன நடக்குமோ என்றஞ்சி அன்று கோபாவேசத்துடனே படுத்து விட்டாள்.

வீட்டை விட்டுச் சென்ற கல்யாணியும் அவள் தாயாரும் வண்டியில் படுத்தபடி புலம்பிக் கொண்டே செல்கிருர்கள். ஒருவரை யொருவர் தேற்றமாட்டாது கட்டு மீறிய அபாரமான சோகத் தினல் தம்மையே மறந்து" ஆகா! இத்தகைய தீவினையும் நேருமா!" என்று எண்ணிக் கண்ணீர் வழிய நித்திரையின்றி இரவைக் கழித்தார்கள். உதயமாகியதும் வண்டி வழக்கமாய் மூட்டைகள் இறங்கும் ஊரில் நின்றது.

கல்யாணி வண்டிக்கார முருகனிடத்தில் தனக்கு இவ்வூருக்கரு கிலுள்ள நாட்டுப் புறத்தில் மனிதர்களிருப்பதாகப் பொய் கூறியதை முருகன் நிஜமென்று நம்பியிருந்தானகையால் அவர்களை அவ்வூர் சத்திர மொன்றில் இறக்கிவிட்டு "அம்மா! நீங்கள் இங்கேயே இருங் கள்; நான் அரிசி மூட்டையை மண்டியில் போட்டு விட்டு மீண்டும் வந்து உங்களைக் கிராமத்தில் கொண்டுவிடுகிறேன்" என்றுன்.

இது கேட்ட கல்யாணிக்கு யோசனை பிறந்து விட்டது. அதா வது தான் இவனுடன் வண்டியில் எந்தக் கிராமத்திற்குச் செல்வது? அவ்விதம் செல்வதனல் நாம் நமக்கு பந்துக்களிருப்பதாகக் கூறிய வார்த்தை உண்மை யல்லவென்றுதெரிந்து கொள்வான். ஆகையால் இதற்கோர் சமயோசிதமான பதில் கூறிவிடுவது தான் ச்லாக்யம்" என்று எண்ணியவளாய் முருகனை நோக்கி" அப்பா முருகா! உனக் கெதற்காக சிரமம் கொடுக்க வேண்டும்? இது பரியந்தம் கொண்டு சேர்த்ததற்கே யான் என்ன விதமாகக் கைம்மாறு செய்யப் போ கிறேன்? இந்த சத்திரத்திற்கு இன்று சாயரக்ஷை அவர்கள் வருவ தாயும் வந்து எங்களை அழைத்துப் போவதாயும் நேற்று கடிதம் வந்தது. ஆகையால் நாங்கள் இங்கேயே இருக்கின்றேம். நீ சென்று வா! நாங்கள் இவ்விடத்திலிருப்பதாகவாவது எங்கள் மனிதர் வீட் டிற்குச் செல்லப் போவதாகவாவது நீ என் அண்ணன், அண்ணிக் குத் தெரிவிக்காதே! எங்கள் விதியின் வழி நடக்கிறது. அப்பா! நேரமாகிவிட்டது. சென்று வா!" என்றுள். உடனே முருகன் விடை பெற்றுக் கொண்டு தன் வேலையாகச் சென்று விட்டான்.

அந்த சத்திரத்தில் மூன்று தினத்திற்குபிரயாணிகளுக்குச்சாப் பாடு போடும் படியாக ஓர் புண்ணியாத்மா ஏற்பாடு செய்திருக்கிறார் என்பதை கல்யாணி விசாரித்தறிந்து கொண்டாள். முதல் நாள்பூரா வாகதன் தாயார் பட்டினி கிடப்பதைத்தாங்கமாட்டாது அருகிலுள்ள குளத்திற்குச் சென்று ஸ்நானத்தை முடித்துக் கொண்டு சத்திரத்தி ற்கு வந்து தன் தாயாருக்கு வேண்டிய உதவிசெய்து, நித்ய கடனை முடிக்கச் செய்து சத்திரத்து எஜமானனிடத்தில் தெரிவித்து முத லில் உணவை வாங்கி தன் தாயாருக்கும் குழந்தைக்கும் உண்பித் துப் பின்னர் தானும் ஆகாரம் செய்து விட்டு, இனி என்ன செய்வ தென்று யோசனையில் ஆழ்ந்து விட்டாள். தானிருப்பிடத்தை எவ ருமறியாத விடமாயும், தன்னை யாரும் கண்டிராத ஊராகவும் உள்ள விடத்திற்குச் சென்று தன் காலத்தைக்கடத்த உத்தேசித்திருந் தாள்.

தன் முடிவான தீர்மானத்தைத் தன் தாயாருடன் கூறினாள். அதைதாயாரும் ஆமோதித்தாள். பின்னர் அன்றும் மறுநாளும் சத் திரத்திலேயே தங்கி இருந்து மூன்றுவது நாள் அவ்விடத்தை விட் டுப் போவதென்று நிச்சயித்துக் கொண்டு சத்திரத்திலேயே தங்கினார்கள். சத்திரத்திற்கு வருவாரும் போவாரும் கணக்கற்ற வராக விருந்தார்கள். அவர்களின் மூலமாக அவ்வூருக்கருகாமையில் என்னென்ன ஊர்களிருக்கின்றனவென்றும் அங்கு செல்வதற்கு வழி எவ்விதம்என்றும் கல்யாணி வெகு சாமர்த்தியமாக தன்பேச்சுவளர்ச் சியின் மூலமாகவே கேட்டுத் தெரிந்து கொண்டாள். அந்த ஊருக்கு சுமார் 10 மைல் தூரத்திற் கப்பால் திருக்கழிக்குன்றம் என்கிற ஓர் புண்ணியக்ஷேத்திரமிருப்பதாயும் அந்த க்ஷேத்திரத்திற்கு பிரார்த்தனைகள் நிறைவேற்றவும், வியாதிகள் நிவர்த்தியாகும் பொ ருட்டும், ஸ்தல விசேஷத்தினால் வாசத்தின் பொருட்டாகவும் ஆயிரக் கணக்கான ஜனங்கள் செல்வதுண்டு என்றும், விசேஷமான மகத்து வத்தையுடைய பக்ஷி தீர்த்தத்தில் ஸ்நானாதினால் தேகத்திலுள்ள சகல மான நோய்களும் குணமடைந்து விடுமென்றும், வேதகிரீசுவரரை யும் அம்மனையும் தரிசனம் செய்தால் கோடி பாவங்களெல்லாம் நீங்கிவிடும் என்றும் இவ்விதம் பலமாதிரியாக ஜனங்கள் கொண்

டாடிப் பேசியதைக் கேட்ட கல்யாணிக்கு திருக்கழிக்குன்றத் திலேயே இருக்கவேண்டுமென்ற அவா மிகுதியாகிவிட்டது. ஆகை யால் அவ்விடத்திற்கே செல்வதென்று தீர்மானித்து விட்டாள்.

அவ்விதமே மறுதினம் காலையில் ஓர் சத்தவண்டியமர்த்திக் கொண்டு தன் தாயுடனும் குழந்தையுடனும் திருக்கழிக்குன்றத் தை யடைந்து அங்குள்ள சத்திரத்திலிறங்கினுள். அச்சத்திரத்தில் முன் பின்னறியாத பல ஜனங்கள் வந்து சுவாமிதரிசனுமிர்தமாகத் தங்கியிருந்தார்கள். அவ்விடமும், அம்மனிதர்களும் நமது மடவாரு க்குப் புதியதாக விருந்தமையால் அவள் இனி தான் என்ன செய் வது? எவ்விதம் தனது ஜீவனத்தை நடத்தும் உபாயத்தை யறிவது? இன்று உணவிற்கு யாது வழி தேடுவது? "நீங்கள் யார், எங் கிருந்து வந்தீர்கள்? உங்களுக்கு ஆண்பிள்ளைகள் துணை யாரு மில்லையா?" என்ற கேள்விகள் பிறக்குமானல் என்ன வித மான பதில் சொல்வது? அண்ணன் அண்ணி கொடுமையை யுரைப்பதா! நாத்தி மாமியின் தீமையை விளம்புவதா! பர்த்தா விலக்கிய பரிபவத்தைக் கூறுவதா! ஐயோ! இவற்றுள் எதைக் கூறிடினும் பெருத்த அவமானமும் தலை குனிபுமல்லவா நமக்கு ஏற்படும்? அதோடு அதைக் கேட்போர் தான் நம்மை என்ன விதமாக மதிப்பார்கள்? ஆ! ஜகதீசா! இத்தகைய சங்கடத்தை எவ்வாறு சகிப்பேன்? என்ன விதம் உய்வேன்? எது செய்வேன்?" என்று அபாரமான திகிலையும் கலக்கத்தையு மடைந்து இடிந்துப் போய், மனம் நொந்து செய்வதின்ன தென்பதை யறியாது யோசனையில் மூழ்கிவிட்டாள்.

பின்னர், சற்று தேறியவளாய் "ஐயோ! நான் இவ்விதம் விசனித் துக் கொண்டிருந்தால் நோயாளியாகிய தாயாரும், குழந்தையும் பசியினல் துடித்து சோகித்துப் போய் விடுவார்களே! அவர்களுக்கு ஆகாரத்திற்கு ஏதேனும் வழி செய்யவேண்டுமே!" என்று சிந் தித்த வண்ணம் எழுந்து தன் தாயினிடம் சொல்லிக் கொண்டு குளமிருப்பிடத்தைக் கேட்டறிந்து கொண்டு சென்று ஸ்நானத்தை முடித்துக்கொண்டு நேரே கோயிலுக்குச் சென்றுள். ஆகா! வெகு எழிலுடன் எழுந்தருளியிருக்கும் ஈசனை தரிசித்து பக்திமேலீட் டால்" ஆகா! என்னப்பனே! ஜகதீசா!

பாராயோ வென்னை முகம் பார்த்தொருகாலென்கவலை
தீராயோ வாய் திறந்து செப்பாய் பராபரமே!
கன்றினுக்குச் சேதா கனிந்திரங்கல் போலவெனக்
கென்றிரங்குவாய் கருணை யெந்தாய் பராபரமே!
உள்ள மறிவாயுழைப் பறிவாய் நானேழை
தள்ளிவிடின் மெத்தத்தவிப்பேன் பராபரமே!
எண்ணாத வெண்ண மெலா யெண்ணியெண்ணியேழை நெஞ்சம்
புண்ணாகச் செய்ததினிப் போதும் பராபரமே!
ஆழித்துரும் பெனவே யங்கு மிங்கு முன்னடிமை
பாழிற்றிரிவ தென்னபாவம் பராபரமே!
கடலமுதே தேனே யென் கண்ணே கவலைப்
படமுடியா தென்னை முகம் பார்நீ பராபரமே!

தாயுமானவர்

ஆகா! வேதகிரீசுவரா! எனது வேதனையைப் போக்கி உனது ஆதரவை யளித்து இப் பேதையைக் காக்கமாட்டாயா? கேவலமான பெண் ஜென்மம் எடுக்கச் செய்து என்னை இத்தகைய அவகேடான பிழைப்புப் பிழைக்க வைத்து விட்டாயே! என் செய்வேன்? என் மனம் பொங்கித் தவிக்கின்றதே! அதற்கோர் ஆறுதலளித்து என்னை இவ்வுலகத்தினின்றும் கிளப்பமாட்டாயா? என்னப்பனே. தாயே! அம்பிகே! பரமேச்வரீ!" என்று பல விதமாக தோத்திரம் செய்துப் பின்னர் அவ்விடத்தை விட்டு வெளியே சென்று அந்த கோயிலிலிருந்த ஓர் மனிதரை நோக்கி "ஐயா! நாங்கள் அயலூர்; தேசாந்தரியாக வந்துள்ளோம். எமக்குக் கொஞ்சம் பிரஸாதம் இக் கோயிலில் கிடைக்குமா!" என்று வெகு லஜ்ஜையுடன் தலை குனிந்தவாறு கேட்டாள். இதைக் கேட்ட அம்மனிதன் ஒரு மாதிரியாக நகைத்துக் கொண்டு "அம்மா! நான் உன்னிடத்தில் சில வார்த்தைகள் பேசவேண்டும். அதைப் பேசியான பின்பு நீ கேட்ட கேள்வைக்குப் பதிலளிக்கின்றேன்" என்று கூறி அவளுக்கு எதிர் முகமாக வழி மறித்து நின்றான். அந்தோ! இந்த அநியாயச் செய்கையைக் கண்ட கல்யாணியின் குடலும் மார்பும் நடுக்கலுற்று உயிரே தத்தளிக்க ஆரம்பித்து விட்டது. அவள் "ஆ! என்ன கஷ்டகாலக் கொடுமை ஈசா!" என்று எண்ணியவளாய்க் கல்லாய்ச் சமைந்து விட்டாள்,

182553

"ஜகன்மோகினி" யில

வெளிவந்த நாவல்கள்

மலர் I. ஸ்ரீமான் வடுவூர் கே. துரைசாமி அய்யங்கார் எழுதிய
காளிங்கராயன் கோட்டை ரகசியம்
(2-பாகங்கள்) ரூ. 4 0 0
மலர் II. விலாஸவதி (2-பாகங்கள்) ரூ. 3 0 0

ஸ்ரீமான் அ. முத்துகிருஷ்ணன் எழுதியவை.

கனக சபை	ரூ.	1	8	0
கோகிலம்	ரூ.	0	6	0

ஸ்ரீமதி வை. மு கோதைநாயகி அம்மாள் எழுதியவை.

மலர் III.	வைதேகி (2-பாகங்கள்)	ரூ.	2	8	0
மலர் IV.	பத்மசுந்தரன் (2-பாகங்கள்)	ரூ.	2	8	0
மலர் V.	ராதாமணி (2-பாகங்கள்) ...	ரூ.	2	8	0
	சண்பக விஜயம் ...	ரூ.	1	12	0
	கௌரீ முகுந்தன் ...	ரூ.	1	12	0

"ஜகன்மோகினி" சந்தாதாரர்களுக்கு குறைந்த விலை.

வைதேகி	ரூ.	2	0	0
பத்மசுந்தரன் ...	ரூ.	2	0	0
ராதாமணி ...	ரூ.	2	0	0
சண்பக விஜயம்.	ரூ.	1	8	0
கௌரீ முகுந்தன்	ரூ.	1	8	0

"ஜகன்மோகினி" ஆபீஸ்
26, தேரடித் தெரு,
திருவல்லிக்கேணி, சென்னை.

இனம் தபாற்செலவு இனம்

இரண்டு அணு ஸ்டாம்பு அனுப்புகிறவர்களுக்கு "போலீஸ் கிலி போதி ராயர்" ராவ் பகதூர் ரஸகுல்லாசாஹிப்" என்னும் இரண்டு நாவல்களும், நான்கணு ஸ்டாம்பு அனுப்புகிறவர்களுக்கு அமிருதமாலினியும் அனுப்பப்படும்.

	ரூ.	அ.		ரூ.	அ.
மதன சிங்கர்	1	0	சுந்தர வதனி	0	12
மர்ம முகி	0	12	வஸந்த சமுத்ரம்	0	12
ராஜசேகரன்	0	8	வீரஸிம்ஹன்	0	8

வத்ஸா கம்பெனி, திருவல்லிக்கேணி.

அமிர்தாஞ்சனம்

எல்லா நோய்களுக்கும் திவ்ய ஔஷதம்

40 வருஷங்களாக

"ஜகன்மோகினி" யாய் விளங்குவது

எல்லாக் கடைகளிலும் கிடைக்கும்.

விலை அணா பத்து.

அமிர்தாஞ்சன் டிபோ,

7, தம்புச்செட்டி வீதி, சென்னை.